வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 31.05.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 176 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# நெருக்கடி தீர்வுக்கு பிரிட்டன் உதவும்!

## அந்நாட்டு பிரதமர் உறுதி



கொழும்பு, மே 31

நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கும், ஏற்றுமதி சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளை கட்டியெழுப்பவும் இலங்கைக்கு உதவுவதாக பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் உறுதியளித்தார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தனது 'ருவிட்டர்' பக்கத்தில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் பிரதமர் பொறிஸ் ஜோன்சனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்தே அவர் இந்தப் பதிவை தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்டார்.

மேலும், இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் பொறிஸ் ஜோன்சனுக்கு விளக்கமளித்தாரெனவும் பிரதமர் ரணில் தெரிவித்திருந்தார். (ஐ)

## இலங்கைக்கு 70 கோடி டொலர்; உலக வங்கி தலைமை மறுப்பு!

வாஷிங்டன், மே 31

இலங்கைக்கு 70 கோடி டொலர்களை உலக வங்கி வழங்கவுள்ளது என்று வெளியான தகவல்கள் பொய்யானவை என்று உலக வங்கி நேற்று அறிவித்தது. அத்துடன், முறையான பொருளாதார கொள்கை கட்டமைப்பை உருவாக்கும் வரை எந்த நிதியுதவியும் வழங்கப்படாது என்று உலக வங்கியின் இலங்கை- மாலைதீவுகள் - நேபாளம் ஆகியவற்றுக்கான பணிப்பாளர் பரிஸ் ஹதாத் செர்வோஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உடனடி நிவாரணங்களை உலக வங்கி இலங்கைக்கு

15

## ரயிலுடன் மோதுண்டு இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 31

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை மோட்டார் சைக்கிளில் கடக்க முயன்ற இளைஞன் ரயிலுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் அரியாலை - நாவலடியில் இடம்பெற்றது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த ம. அரவிந்தன் (வயது- 28 ) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து அங்கு கூடிய கிராம மக்கள் தொடருந்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## போக்குவரத்து சபை பஸ்ஸில் திருமணத் தம்பதியர் பயணம்!



கொழும்பு, மே.31

மாத்தறை மாவட்டத்தில் உள்ள அக்குரஸ்ஸ மாரம்ப பிரதேசத்தில் இளம் தம்பதியர் தமது திருமண பயணத்துக்காக இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் பயணித்த காட்சியை 'லங்காதீப' சிங்கள நாளேடு வெளியிட்டுள்ளது.

தற்போதைய எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக புதுமணத் தம்பதியர் தெரிவித்தனர்.

திருமண நிகழ்வு நாட்டுக்கு சுமை ஏற்படாத வகையில் மிகவும் அடக்கமாகவும் கண்ணியமாகவும் திட்டமிடப்பட்டதாக விதானகிரி, மரம்ப

15

## யாழ். விமான நிலையத்தை மூடும் திட்டம் எதுவுமில்லை!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மே 31

"இலங்கையிலுள்ள எந்தவொரு விமான நிலையத்தையோ, தொழில் சாலையையோ, அரச நிறுவனத்தையோ மூடும் திட்டம் எதுவுமில்லை" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

15

## இன்று முதல் எரிவாயு விநியோகம்!

கொழும்பு, மே 31

இன்று செவ்வாய்க்கிழமை மாலை முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, இன்றைய தினம்

15

## "ஆயிஷாவை நானே கொன்றேன்!"

### மூன்று பிள்ளைகளின் தந்தை குற்ற ஒப்புதல் வாக்குமூலம்!

கொழும்பு, மே 31

9 வயதான பாத்திமா ஆயிஷாவை கொன்றது தானே என்று மூன்று பிள்ளைகளின் தந்தையான 29 வயது நபர் குற்றப் புலனாய்வு பொலிஸாரிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

களுத்துறை - பண்டாரகமை - அட்லுகமையை சேர்ந்த பாத்திமா ஆயஷா கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போயிருந்தார். இந்நிலையில், மறுநாள் சதுப்பு நிலப் பகுதியில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுமியின் மரண பரிசோதனை அறிக்கையில் அவர் நீரில் மூழ்கடிக்கப்பட்டே கொலப்பட்டார் என்றும், துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்

15

## இராணுவ அதிகாரிகளினால் ரூ.4,459 மில்லியன் வீணடிப்பு!

### சிங்கள ஊடகம் பரபரப்பு தகவல்

கொழும்பு, மே. 31

இலங்கை இராணுவத்தில் முதலாம் தர அதிகாரிகளின் முறைகேடுகளால் 4,459 மில்லியன் ரூபா வீணடிக்கப்பட்டு வருவதாகவும் எரிபொருள் மற்றும் நாட்டின் நிதிப் பிரச்னைக்குத் தீர்வாகவும் முதலில் இராணுவத்துக்காக ஒதுக்கப்படும் நிதியை மட்டுப்படுத்த வேண்டும் என்று சிங்கள ஊடகம் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை வெளியான அந்த ஊடகத்தின் நீண்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய

15

## ஜோசப், ரவிராஜ், நடேசன் படுகொலை:

## பிள்ளையானை கைது செய்ய பிரதமர் ரணிலுக்கு அழுத்தம்?

கொழும்பு, மே 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், ஊடகவியலாளர் ஐ. நடேசன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன. இதேசமயம், இந்த வழக்குகளுடன் தொடர்புடைய வர் என்று கூறப்படும்

15

## பொருளாதார நெருக்கடியால் 2,000 வெதுப்பகங்கள் மூடல்

கொழும்பு, மே.31

இலங்கையில் உள்ள 7,000 வெதுப்பகங்களில் 2,000 க்கும் அதிகமான வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக அதிகளவான வெதுப்பகங்கள் மூடப்படும் அபாயம் உள்ளதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின்

15

## காணாமலாக்கப்பட்டோருக்காக வடக்கில் நேற்றுப் போராட்டம்!

கிளிநொச்சி, மே 31

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டு வடக்கில் நேற்று கவனவீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலேயே நேற்று இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் "எமக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம்", "உள்ளக விசாரணை எமக்கு வேண்டாம் சர்வதேச விசாரணையே வேண்டும்", "காணாமல்

15

## "பயங்கரவாத பட்டியலிலிருந்து புலிகளை நீக்க கனடா உதவும்"

றொறன்ரோ, மே 31

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என்ற பட்டியலிலிருந்து நீக்குவதோடு ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய நாடுகளும் தமிழின படுகொலைகள்பற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவும் கனடா வலியுறுத்தும் என அந்த நாட்டின் இளம் அரசியல் பிரமுகர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

15

## இப்படியும் நடக்கிறது…!

வவுனியாவில் ஏ ஒன்பது வீதியில் நண்பர் ஒருவருக்கு பெரிய காணி ஒன்று உண்டு. பிரான்சில் வாழும் அவர் அந்தக் காணிபற்றி அடிக்கடி கூறுவதுண்டு. ஊருக்கு வரும்போதெல்லாம் மறக்காமல் தொடர்புகொள்ளுவார்.

கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்தபோது அவரது காணியில் டிரக்டர் ஒன்று உழுதுகொண்டிருந்தது.

'மனுசன் பிரான்சிலிருந்து வந்திருக்கிறார், இன்னமும் என்னோடு கதைக்கவில்லையே' என்று அவருக்கு தொலைபேசி எடுத்தேன்.

அவர் பிரான்சில்தான் நிற்கின்றார். அப்ப காணியை ஏன் உழுகிறீர்கள் என்று கேட்டேன்.

அது, எனது நண்பர் ஒருவர் சும்மாதானே இருக்குது, பயறு விதைக்கலாமா என்று கேட்டார். அதற்கென்ன, விதையுங்களேன் என்று சொன்னேன் என்றார்.

கூடவே, நாட்டிலை இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் உணவுக்கு பஞ்சம் வரும் என்று சொல்லுகினம். அவர் பயறு விதைத்தால், அவருக்கு உதவும்தானே என்றார் நண்பர்.

வரவிருக்கும் நெருக்கடியைப்பற்றி நம்மவர்கள் சிந்திக்க தொடங்கியிருப்பது மகிழ்ச்சியைத் தந்தது. நேற்றைய 'ஈழநாடு' பார்த்ததும், மேலும் மகிழ்ச்சி.

தமிழ் தேசிய பசுமை இயக்கம், வரவிருக்கும் நெருக்கடியை எதிர்கொள்ள மக்களை வழிப்படுத்த தொடங்கியிருப்பது மேலும் மகிழ்ச்சியைத் தந்தது.

இராசதானியம் என்ற பெயரில் அவர்கள் முன்னெடுக்கும் முயற்சி, காலத்தின் தேவை. நமது அரசியல்வாதிகள், ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பது பற்றியே சிந்தித்துக்கொண்டும், ஓடி ஓடி அதற்காகவே பணியாற்றிக்கொண்டும் இருக்கும்போது, தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் பணி காலத்தால் அழியாதது.

இந்த வேளையில்தான், லண்டனிலிருந்து சமூக சேவையாளர் என். சச்சிதானந்தம் அவர்களிடமிருந்து ஒரு குறுந்தகவல் வாட்ஸ் அப்பில் வந்தது. எனது அன்பான சகோதரர்களுக்கு, சில நிமிடம் ஒதுக்கி இறுதிவரை வாசிக்கவும் என்ற குறிப்பு வேறு.

படித்து முடித்தபோது, அதனை நிச்சயம் இந்த பத்தியில் சேர்க்கவேண்டும்போல இந்தது.

அதனை அப்படியே கீழே தருகின்றேன்.

'நாம் நினைத்துக்கொண்டிருப்பதை விட எமது நாட்டின் எதிர்காலம் கடுமையாக அமையப்போகின்றது, அது நம் அனைவரையும் கடுமையாக பாதிக்கும். எமது குடும்பத்தை தற்காத்து கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

'எதிர்வரும் மாதங்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை நாடு சந்திக்க நேரிடும் என பொருளாதார வல்லுனர்கள் அறியத் தருகின்றார்கள். விசேடமாக, உணவு தட்டுப்பாடு குறித்து பெரிதும் பேசப்படுகின்றது. எனவே, எமது வாழ்க்கை முறையில் நாமும் உடனடி மாற்றங்கள் செய்வதே எமது குடும்பத்தை பாதுகாக்கும் ஒரே வழியாகும்.

'தொழில் செய்ய ஆர்வமின்றி இருக்கும் இளைஞர்கள் உடனடியாக தொழில் தேடிக் கொள்ளுங்கள். இனிவரும் காலங்களில் உங்கள் செலவினங்களை உங்கள் குடும்பத்தாரால் சமாளிக்க இயலாது. சிந்தியுங்கள். உயர் தொழிலுக்காக காத்திருப்போர் தற்காலிக தொழில் ஒன்றையாவது தேடிக்கொள்வது சிறந்தது.

'இதுவரை காலமும் வீட்டுத்தோட்டத்தினை விளையாட்டாக எடுத்துக்கொண்ட நாம், இன்று முதலே அதிக கவனம் செலுத்துவோம். பச்சை மிளகாய், தக்காளி, போஞ்சி, அவரை, கீரை வகைகள், கத்தரி, பரங்கிக்காய், மரவள்ளி போன்றவற்றை இயன்றவரை, இடம் உள்ள இடமெல்லாம் உண்டாக்குவோம், உணவு பற்றாக் குறையும் தீரும், மேலதிகமாக சிறு வருமானமும் கிடைக்கும்.

'விவசாய காணிகளில் பிரதான பயிர்களுக்கு மேலதிகமாக ஓரங்களில் வீட்டுக்கு தேவையான உப பயிர்களை பயிரிடுவோம்.

'முட்டை, நெத்தலி, இறைச்சி போன்றவற்றின் விலை உயர்வினால் தற்போதைய குழந்தைகள் பெரும் போஷாக்கு பிரச்னையை எதிர்கொள்கிறார்கள், எனவே, கீரை வகைகளை அதிகம் உண்டாக்குவோம், அவர்களை அதிகம் உட்கொள்ள செய்வோம்.

'அடுத்த சில மாதங்களுக்கு அனாவசிய செலவினங்களை இன்று முதலே தவிர்ப்போம். மதுபான செலவுகள், புகைபிடிப்பதற்கான செலவுகள், உடைகள் கொள்வனவு, அனாவசிய பயணங்கள், தொலைபேசி கொள்வனவு, வீடு, வாகனங்கள் போன்றவற்றுக்கான மெருகூட்டுதல் வேலைகள்.

'தேவைக்கதிகமாக உணவு சமைத்து, வீண் விரயம் செய்வதை தவிர்க்கவேண்டும்.

'இயன்றவரை கொண்டாட்டங்களை தவிர்ப்போம். தேவையற்ற பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்றவை.

'பலர் முன்கூட்டியே எதிர்வரும் ஆபத்தை உணர்ந்து, இவற்றுக்கு தயாராகி விட்டனர், ஆனால், இன்னும் பலருக்கு அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பது பற்றி ஒரு புரிதலும் இல்லை.

'முதலில் எமது குடும்ப உறுப்பினர்களோடு இதுகுறித்து பேசி அடுத்து வரும் மாதங்களில் ஏற்படப்போகும் ஆபத்தான நிலையை அவர்களுக்கு புரியவைத்தல் வேண்டும்.

'எனவே, எமது பிரிவில் வசிக்கும் கற்றவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள், சமூக அமைப்புகளில் உள்ளவர்கள், முற்போக்கான இளைஞர்கள், உத்தியோகத்தர்கள் இயன்றவரை நாம் முதலில் மாற்றத்தினை ஏற்று செயல்படுத்துவதோடு, எமது குடும்பத்தாருக்கு, அயலவர்களுக்கு, மற்றும் ஏனையோருக்கும் வலியுறுத்துவோம்.

'இனி இது, வாழ்வா சாவா போராட்டம்

'காலம் தாழ்த்தாது உடனடியாக செயலில் இறங்குவோம்.

'ஒவ்வொரு தனி மனிதனதும் மாற்றமே சமூக மாற்றத்தை உருவாக்கும்'.

இதுவே, நண்பர் சச்சியிடமிருந்து வந்த செய்தி.

இந்தச் செய்தியைப் படித்து முடித்த பின்னர், உங்களில் யாராவது ஒருவர் இதில் இருக்கின்ற விடயங்களில் உங்களால் முடிந்ததைச் செய்தால், அதுவே இந்தப் பத்தியின் பயன் என்று நினைக்கின்றேன்.

- ஊர்க்குருவி

# வற்றாப்பளை கண்ணகி ஆலய திருவிழா பாக்குத் தெண்டலுடன் நேற்று ஆரம்பம்!

முல்லைத்தீவு, மே 31

வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு - வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று அதிகாலை பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமானது.

கொரோனா தாக்கம் காரணமாக இரண்டு வருட திருவிழா பக்தர்களின் பங்கேற்பின்றி நடைபெற்றது. இந்நிலையில், இம்முறை கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வழமைபோன்று நடைபெறுகிறது.

இந்நிலையில், நேற்று அதிகாலை 2 மணிக்கு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளை தொடர்ந்து, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலுடன் நீண்ட தொடர்பை பேணி வந்த குடியானவர்களுக்கு மரவு வழியாக அறிவிப்பதற்காக அவர்களின் வீடுகளுக்கு சென்று பாக்குத்தெண்டல் இடம்பெற்றது.

நேற்று பாக்கு தெண்டலுடன் ஆரம்பமான இந்த ஆண்டுக்கான (2022) வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தில் திங்கட்கிழமை தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் அதனை தொடர்ந்து திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மனின் பொங்கல் உற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபைக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி நேற்று பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகரசபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப்பெற்றிருந்தது. (ஐ)

## ஜோன்ஸ்டன் எம்.பி. மீது ஊழல் வழக்கு தாக்கல்!

கொழும்பு, மே 31

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

அவர் அமைச்சராக இருந்தபோது சதொச ஊழியர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் அரசுக்கு 84 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். பல்கலைக்கழக வணிகபீட புதுமுக மாணவர் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020-2021 ஆம் கல்வி ஆண் டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு நாளைமுதல் ஆரம்பமாகவுள்ளன.

திசைமுகப்படுத்தல் நிகழ்வுகளின் அறிமுக நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முகாமைத்துவகற்கைகள் வணிக பீட சபா மண்டபத்தில், பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. 2020 - 2021ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப் பட்ட மாணவர்களும், பெற்றோ ரும் நிகழ்நிலையூடாக இந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடியும்.

நிகழ்வுக்கான இணைப்புகள் புதுமுக மாணவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல், மற்றும் கைபேசிக் குறுந் தகவல்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளன. இணைப்புகள் கிடைக்காதவர்கள் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தின் 021 222 3610 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (ஐ-3)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மே 31

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை புதன் கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை - கட்டுவன் அகில இலங்கை சபரிகிரி ஜயப்பசுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ அ. ஐயப்பதாஷ குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

## இணையவழி சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 31

இலங்கைக்கான கல்வி மேம்பாட்டு மன்றம் - ஐக்கிய இராச்சியம் அமைபின் ஏற்பாட்டில் இணையவழி சந்திப்பு ஒன்று வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) நடைபெறவுள்ளது.

இதில், வட மாகணத்தில் முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகியவற்றின் தற்கால நிலை என்ற தலைப்பில் சுப்பிரமணியம் சற்குணராஜாவும், தமிழ் மக்களின் பெரும் மூலதனம் கல்வி மட்டுமே என்ற தலைப்பில் செள். கந்தையாவும் உரையாற்றவுள்ளனர்.

இந்த சந்திப்பில் பங்கேற்க விரும்புவோம் சூம் செயலியில் 857 8997 5607 என்ற அடையாள எண் மூலம் முயுடுஏஜ என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
31.05.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கற்காலத்தை விரும்பும் தேரர்களின் தேசம்?

புதிய நிதியமைச்சர், விஜயதாஸ ராஜபக்ஷ -21ஆவது திருத்தச் சட்டத்தின் நகலை, மகாநாயக்க தேரர்களிடம் ஒப்படைத்திருக்கின்றார். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் முற்றிலும் இல்லாமல் ஆக்கப்படக்கூடாதென்றும், 13ஆவது திருத்தச்சட்டம், நாட்டுக்கு ஆபத்தானது, அதனை கட்டுப்படுத்துவதற்கு, ஜனாதிபதியிடம், முப்படைகளின் அதிகாரம் இருக்க வேண்டியது, அவசியமென்றும், மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. முதலாவது, தேரர்களிடம் அரசியலமைப்பு யோசனைகள் தொடர்பில் கருத்துக் கேட்பதே தவறானது. ஆனால், சிங்கள அரசியலில், இது ஒரு வாழையடி வாழையாக தொடர கின்றது. ஓர் ஊரிலிருப்பவர், அந்தப் பகுதியிலுள்ள பன்சலவில் இருக்கும் பிக்குவிடம் ஆசீர்வாதம் பெறுவதுபோல், அறிவுபூர்வமான அரசியல் முடிவுகளை மேற்கொள்ளும்போது, மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையை ஆட்சியிலிருப்பவர்கள் பெற முயற்சிப்பதும், ஒரு மரபாகவே தொடர்கின்றது.

உலகம் பல மாற்றங்களை ஏற்று நகர்கின்றபோது, இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் மட்டும் கற்காலத்தில் தீர்வுகளை தேடுபவர்களாக இருக்கின்றனர். மன்னர்களின் காலத்தில், ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை சொல்வதில், துறவிகள் பங்கு வகித்திருக்கின்றனர். அவ்வாறு, பங்குவகித்த துறவிகள்கூட, அரசியலை கற்றுத்தேறியவர்களாகவே இருந்திருக்கின்றனர். ஆனால், நவீன அரசியலில் எங்கும் மதகுருக்களின் ஆலோசனைகளை பெறுவதில்லை. ஆனால், இலங்கைத் தீவு மட்டும் இதற்கு விதிவிலக்காகவே இருந்து வருகின்றது.

இரண்டு உலகப் போர்கள் – அந்தப் போர்களின் முடிவில் ஏற்பட்ட உலக ஒழுங்கு – அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பனிப் போர் – அதன் பின்னர் இடம்பெற்ற பல மாற்றங்கள் – என பல வகையான மாறுதல்களுடன் நவீன அரசியல் நகர்கின்றபோதும், இலங்கைத் தீவில் மட்டும், இந்தத் தீவு சுதந்திரமடைந்ததாக கூறப்படும் 1948இலிருந்து, இன்றுவரையில், ஒரே விடயமே திரும்பத்திரும்ப, விவாதிக்கப்பட்டு வருகின்றது. அதாவது, அதிகாரப் பகிர்வு. 1978இல், கொண்டுவரப்பட்ட, அரசியல் யாப்பு, இதுவரையில் 20 தடவைகள் திருத்தப்பட்ட பின்னரும்கூட, அதிகாரப்பகிர்வு விடயத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில், இன்றுவரையில் முன்னேற முடியவில்லை.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் வழியாகக்கிடைக்கப்பெற்ற, 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட, இன்றுவரையில், முழுமையாக, அமுல்படுத்த முடியவில்லை. அது இன்னொருபுறம், ஒரு தனி விவாதமாகவே தொடர்கின்றது. இலங்கையர்கள் தங்களின் பிரச்னைகளைத் தாங்களாகவே தீர்த்துக் கொள்ள முடியாத இடை வெளி யில்தான், இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது. இன்று – அதிகாரப் பகிர்வின் ஒரேயோர் ஆதாரமாகவும், அடித்தளமாகவும் இருப்பது, 13ஆவது திருத்தச் சட்டம் மட்டும்தான். ஆனால், அதனையே ஆபத்தானதென்று கூறுமளவுக்கே, தேரர்களின் அறிவிருக்கின்றது?

ஒரு நாடு முன்னேறுவதற்கு, அறிவுசார் வல்லுநர்களின் ஆலோசனைகளே முதன்மையானது. கௌடில்யர் கூறுவது போன்று, தன்னைச் சுற்றி, அறிவற்றவர்களை வைத்திருக்கும் அரசனை வீழ்த்துவதற்கு வெளியிலிருந்து எதிரிகள் வரவேண்டியதில்லை. இலங்கையின் நிலைமையும் இதுதான். சட்டத்துறையில் கலாநிதி பட்டத்தை பெற்றிருக்கும், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ – 21ஆவது திருத்தச் சட்டத்துக்கான நகலுடன், மகாநாயக்கர்களிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்றால் – இந்த நாட்டை எவரால் காப்பாற்ற முடியும்?

தேரவாத பௌத்தம் நிலைத்துள்ள ஏனைய நாடுகளான, கம்போடியா, மியன்மார் போன்ற நாடுகளில்கூட, பௌத்த பிக்குகள் அரசியலில் செல்வாக்கை பெற்றிருக்கவில்லை. குறிப்பாக, மியன்மார் இராணுவ ஆட்சியிலிருக்கும்போதுகூட, அங்கு பௌத்த பிக்குகள் அரசியலை தீர்மானிக்கக்கூடிய இடத்தில் இல்லை. ஆனால், இலங்கை மட்டும் இதற்கு முற்றிலும் விதிவிலக்காக இருக்கின்றது. இலங்கைத் தீவு, அறிவற்ற தேரர்களின் பிடியிலிருந்து விடுபட்டு, முற்றிலும் அறிவுபூர்வமான அரசியல் தலைவர்களால், வழிநடத்தப்படாத வரையில், இலங்கைத் தீவில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் நிகழுவதற்கான வாய்ப்பில்லை. நெருக்கடியால் ஏற்படும் மாற்றங்கள்கூட – அதிகார போதையுள்ள நபர் அல்லது, ஓர் அரசியல் குழு, அதிகாரத்துக்கு வருகின்றபோது, மீண்டும் பழைய நிலைக்கு செல்வதற்கான வாய்ப்பே உள்ளது. இலங்கையில் தாராளவாத ஜனநாயகத்தை பலப்படுத்த முடியுமென்று நம்பிக்கொண்டிருக்கும் மேற்குலக அமைப்புக்கள், ஆழமாக சிந்திக்க வேண்டிய இடமும் இதுதான். சிங்களவர்கள் மத்தியில் ஏற்படும் மாற்றங்களை எப்போதும் தமிழர்கள் சந்தேகத்துடன் நோக்குவதற்கான காரணமும் இதுதான்.

ஒப்பீட்டடிப்படையில், அமெரிக்க உதவி நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை தெற்கிலுள்ள சிங்கள அரசு சாரா நிறுவனங்களுக்கே முன்னுரிமையளித்து, நிதி உதவிகளை வழங்கிவருகின்றன. இதன்மூலம், தாராளவாத சிந்தனையின் பக்கமாக சிங்களவர்களை இழுக்க முடிந்ததா? யுத்தத்தால் நிலைகுலைந்து போயிருக்கும் வடக்கு, கிழக்கிலுள்ள நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்குவதை விடவும், தெற்கில் உள்ளவர்களுக்கு உதவிகளை வழங்குவதிலேயே மேற்குலக தூதரகங்களும் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால், அங்கு எத்தகைய மாற்றங்கள் நடந்திருக்கின்றன? அவ்வாறு மாற்றங்கள் நடந்திருந்தால், 21ஆவது திருத்தச் சட்டத்தின் நகல், மகாநாயக்க தேரர்களின் காலடிக்கு சென்றிருக்குமா?

# பிரதமர் ரணிலின் உரை !

**அலசுவது இராஜதந்திரி**

இன்றைய நாட்டு நிலவரம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் உரை நிகழ்த்தியிருந்தார். பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் உரையை கூர்ந்து கவனித்தபோது மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடைய கவிதை வரிகளே ஞாபகத்துக்கு வந்தன.



இவையே பாரதியாரது பிரபலமான அக்கவிதை வரிகளாகும்: “நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனுமின்றி வஞ்சனை சொல்வாரடி, வாய்சொல்லில் வீரரடி“

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து இன்றைய பொருளாதார நிலவரத்தை சீர்செய்து நாட்டை ஓர் உறுதியான நிலைக்கு கொண்டு வரும் விதத்திலேயே பிரதமர் பதவியை தாம் பொறுப்பேற்றாரென ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்தை நோக்கும்போது “ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுதது“ என்ற கபடத்தனத்தைக் குறிக்கும் பழமொழியையும் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

இன்றைய இக்கட்டான பொருளாதார நிலவரத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு மறைமுகமான காரணியாக இருக்கின்றார் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தவாறே ஆளும் தரப்புக்கு மறைமுகமாக ஆதரவை வழங்கியதோடு ஒரு பலமான கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை ரணிலின் நடவடிக்கைகள் பலவீனப்படுத்தியதன் காணமாகவே அந்தக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாஸ உட்பட பலர் வெளியேறியிருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க நம்பகத்தன்மையற்றவர் என்பது என்றோ அவரின் கட்சியைச் சேர்ந்தவர்களால் வெளிப்படையாகவே உணரப்பட்டிருந்தது. ஆனால், இன்று முழு நாடும் மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் ரணில் விக்கிரமசிங்கவின் நம்பகத்தன்மையற்ற போக்கை நன்கறிந்துள்ளன. அத்துடன், “நுதலும் தன்வாயால் கெடும்” என்பதைப் போல ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை அவர் எவ்விதத்திலும் ஒரு தலைமைத்துவத்துவக்கு தகுதியற்றவர் என்பதை எடுத்துக்காட்டியிருந்தது.

இன்றைய நாட்டு நிலவரத்தை எடுத்து நோக்கும்பட்சத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீண்டு வரலாம் என்பதே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினரான இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய “நிறைவேற்று அதிகாரம்” என்ற உபாதையே இன்று நாடு குட்டிச்சுவாராகிப் போவதற்கு மூலகாரணமாக இருக்கின்றது.

முற்றிலும் அரசியல் அனுபவமில்லாத இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையிலும் அதற்கு முன்னர் நாட்டைச் சுரண்டி பொருளாதார ரீதியாக கீழ் நிலைக்கு கொண்டு சென்ற அவரின் சகோதரர் மகிந்த ராஜபக்ஷவின் கரத்திலும் நிறைவேற்று அதிகார ஆட்சி முறை சென்றமைக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் அறிமுகமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையே முக்கிய காரணமாகும்.

தற்போது நிறைவேற்றதிகார ஆட்சியில் அரசியல் முன் அனுபவமில்லாத கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருப்பதற்கும் ரணில் விக்கிரமசிங்கவின் கையாலாகாத்தனமே முக்கிய காரணமாகும்.


ஏற்கனவே, ஜனாதிபதி தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவரே ரணில் விக்கிரமசிங்க. இந்நிலையில் தற்போது தமக்கு உகந்த தருணமாக இன்றைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி பிரதமராக, ராஜபக்ஷ சகோதரர்களுக்கு அனுசரணையாக ரணில் செயல்பட்டுள்ளார்.

இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக முழுநாடுமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் அரசாங்கமும் பதவி விலக வேண்டுமென்றே எதிர்பாரத்திருக்கின்றது. இந்த எதிர்பார்ப்பை வெளிப்படுத்துவதாகவே காலிமுகத்திடல் “கோட்டா கோ கம“ ஆர்ப்பாட்டமும் ஐம்பது நாட்களையும் கடந்து இடம்பெற்று வருகின்றது.

இத்தகைய பின்னணியில் நாட்டு மக்களின் நாடிபிடித்தறியாது கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு அனுசரணை வழங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தாம் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டதை நியாயப்படுத்தும் விதத்தில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தியுள்ளார். அத்துடன், அவரின் உரையில் பொருளாதார ரீதியான சீரமைப்பு பற்றி எதுவும் ரணில் குறிப்பிடுவார் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாக அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முதன்மைப்படுத்தியே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியிருந்தார்.

அத்துடன், தேசிய சபை ஒன்றை அமைப்பது குறித்தும் அவர் தமது உரையில் குறப்பிட்டிருந்தார். நாட்டு மக்கள் தற்போது எதிர்பார்ப்பதெல்லாம் நேரடியாகவே பொருளாதார மறுசீரமைப்பு குறித்து அரசு செயலில் இறங்க வேண்டுமென்பதேயாகும். ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றி பேசியிருப்பதை நோக்கும் போது “தவறான கரங்களுக்கு நிறைவேற்றதிகாரம் செல்லுமாயின் இறைவன் தான் இலங்கையைக் காப்பாற்ற வேண்டும்“ என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த் தன கூறியதே தற்போது நிரூபணமாகியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். செலவு அதிகரிக்கும் என்பதால் நிதானம் அவசியம்.நினைத்த ஒன்றில் வெற்றி காண்பீர்கள். ஆதாயம் காண்பீர்கள். நன்மையான நாள்.

**இடபம்**
மனதில் குழப்பம் வந்து செல்லும். செயல்களில் தடுமாறுவீர்கள். கவனம் தேவை.விரும்பியபடி செயல்படுவீர்கள். யோகமான நாள்.தனித்தன்மை வெளிப்படும். பணவரவு உண்டு.

**மிதுனம்**
திடீர் செலவுகளால் தடுமாறுவீர்கள். நிதானம் அவசியம். பயணத்தில் கவனம் தேவை. புதிய முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி காண்பீர்கள்.நண்பர் ஒத்துழைப்புடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
பிள்ளைகளால் நன்மை கிடைக்கும். எதிர்பாராத வரவு உண்டு. அதிர்ஷ்டமான நாள்.பொன் பொருள் சேர்க்கை உண்டு.தொழிலில் இருந்த தடை விலகும். ஆதாயம் அதிகரிக்கும். நன்மையான நாள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். உத்தியோகத்தில் திறமை வெளிப்படும்.வேலையில் இருந்த இழுபறி விலகும். தொழிலை விரிவு செய்வீர்கள். உங்களின் முயற்சிக்கு உறவினர்கள் உதவியாக இருப்பார்கள்.

**கன்னி**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி விலகும். மனம் தெளிவாகும். வெற்றி உண்டு. பண வரவு உங்களின் சிரமத்தை நீக்கும்.ஈடுபடும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
பயணங்களில் கவனம் தேவை. நீங்கள் அமைதியாக இருந்தாலும் பிரச்னைகள் உங்களைத் தேடி வரும். நிதானம் அவசியம்.வீண்சங்கடங்களை அனுபவிக்க நேரும்.எச்சரிக்கை அவசியம்.

**விருட்சிகம்**
நண்பர்களின் உதவியுடன் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். விலகிச் சென்றவர்கள் தேடி வருவர். திட்டமிட்டிருந்த செயலில் வெற்றி கிடைக்கும்.சுறுசுறுப்பாக செயல்பட்டு செயலில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு**
எதிரிகளை முறியடிப்பீர்கள். ஆதாயமான நாள். உங்கள் செயல்பாடுகளைக் கண்டு மேலதிகாரிகள் பாராட்டுவர். மறைமுக எதிரிகள் விலகுவர். விவேகத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மகரம்**
மனம் சங்கடம் அடையும்.முயற்சியில் தடைகளும் தாமதமும் உண்டாகும். பொறுமையும் நிதானமும் அவசியம்.எச்சரிக்கையுடன் செயல்பட்டால் முயற்சியில் நன்மை அடையலாம். பேச்சில் கவனம் தேவை.

**கும்பம்**
அரசு வகையில் எதிர்பார்ப்பு இழுபறியாகும். எதிர்பார்த்த ஒன்றில் ஏமாற்றம் காண்பீர்கள். வேலைபளு அதிகரிப்பதால் சோர்வு அடைவீர்கள்.பிள்ளைகளால் உதவி உண்டு.

**மீனம்**
உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். பயணத்தால் நன்மையும் ஆதாயமும் அடைவீர்கள்.நன்மையான நாள். ஆதாயம் அதிகரிக்கும்.தொழில் ரீதியாக பயணம் மேற்கொள்வீர்கள். உங்களுடைய எண்ணத்தில் ஒன்று நிறைவேறும்.

*மாநிலங்களவை தேர்தல்*

# காங்கிரஸின் வேட்பாளராக களமிறங்குகிறார் சிதம்பரம்!



சென்னை, மே 31

மாநிலங்களவைத் தேர்தலுக்கு தமிழகத்திலிருந்து காங்கிரஸ் சார்பில் போட்டி யிடுவதற்கு அந்தக் கட்சியின் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ப.சிதம்பரம் நேற்று தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தமிழகத்தில் உள்ள ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக் காலம் வரும் ஜூன் மாதம் நிறைவடைகிறது. இதையடுத்து, தமிழ்நாட்டில் வெற்றிடமாக உள்ள ஆறு மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் ஜூன் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில், போட்டியிடும் தி. மு. க. கூட்டணிக்கான 4 இடங்களில் காங்கிரஸுக்கு ஓர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் வேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்படாத நிலையில், நேற்றைய தினமே அந்தக் கட்சியின் சார்பில் ப. சிதம்பரம் போட்டியிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

# 102 தொன் போதைப்பொருள் ஓராண்டில் தமிழகத்தில் மீட்பு

சென்னை, மே 31

தமிழகத்தில் கடந்த ஓராண்டில் மட்டும் 102 தொன் தடை செய்யப்பட்ட போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அத்துடன்,

கடந்த 1987ஆம் ஆண்டு முதல் மே மாதம் 31ஆம் திகதி உலக புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை 2013ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி போதைப் பொருள்களான குட்கா, பான்பராக், பான்மசாலா போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டது. அன்றிலிருந்து 2021 மே 23-ஆம் திகதி வரை ஒன்பது ஆண்டுகளில் 799.81 தொன் போதைப் பொருள்கள் காவல்துறை, உணவு பாதுகாப்பு துறை மூலம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி கடந்த ஆண்டு அமைந்தபோது முதல்வரின் அறிவுறுத்தலின் படி போதைப் பொருள்களை ஒழிக்க மருத்துவத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், பொலிஸ், வியாபாரிகள் சங்க நிர்வாகிகளோடு ஒரு கூட்டத்தை நடத்தி மாநிலம் முழுவதும் போதைப் பொருள்களை விற்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது.

அந்தவகையில் ஓராண்டு காலத்தில் மட்டும் 102 தொன் போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. அவற் றின் மதிப்பு ரூ. 6. 80 கோடி. இவ்வாறு பறி முதல் செய்யப்பட்ட தோடு மட்டுமல்லாமல் 3,063 கடைகளுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. 21 கடைகளுக்கு சீல் வைக்கப் பட்டுள்ளது - என்றார். (ஐ)

# மாநிலங்களவை தேர்தல் அ.தி.மு.க. மனு தாக்கல்!



சென்னை, மே 31

மாநிலங்களவைத் தேர்தலில் அ. தி. மு. க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

சென்னை தலைமை செயலத்தில் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அதிகாரியான சட்டப்பேரவைச் செயலாளர் சீனிவாசனிடம் சி. வி. சண்முகம், ஆர். தர்மர் ஆகியோர் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

தமிழகத்தில் மாநிலங்களவை உறுப்பினர்கள் 6 பேருக்கான தேர்தல் ஜூன் 10ஆம் திகதி நடைபெறுகிறது. வேட்புமனுத் தாக்கல் இன்று செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைகிறது. வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஜூன் 1ஆம் திகதி, மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் ஜூன் 3 என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. போட்டி இருக்கும் பட்சத்தில் வாக்குப் பதிவு ஜூன் 10ஆம் திகதி நடைபெறும்.

தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் ஜூன் 13ஆம் திகதி நிறைவடையும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தி. மு. க. 3 இடங்கள், காங்கிரஸ் ஓர் இடம், அ. தி. மு. க. 2 இடங்களில் போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

# உதயநிதியை அமைச்சராக்குக நிறைவேற்றப்பட்டது தீர்மானம்!



திருச்சி, மே 31

திருச்சி தெற்கு மாவட்டச் செயல் குழுக் கூட்டம், திருச்சி தெற்கு மாவட்ட அலுவலகத்தில், தமிழக பாடசாலை கல்வி துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட பொறுப்பாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில், ஜூன் 3ஆம் திகதி கருணாநிதியின் 99ஆவது பிறந்த நாள் விழாவை சிறப்பாக மாவட்ட அலுவலகத்தில் கொடி ஏற்றி நலத் திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது எனவும், சட்டப்பேரவை உறுப்பினரும் மாநில இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலினை அமைச்சராக்க வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதல்வர் ஸ்டாலின் 2 நாள்கள் சுற்று பயணமாக திருச்சி சென்ற நிலையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ)

## இரு வாரங்களுக்கு தேவையான டீசல், பெற்றொல் கையிருப்பில்

கொழும்பு, மே. 31

தற்போது கையிருப்பில் உள்ள டீசல் மற்றும் பெற்றோல் நிலவரம் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு தேவையான டீசல் மற்றும் பெற்றோல் என்பன பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் உள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்துடன் டீசல் அடங்கிய கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு நாட்டை வந்தடைந்தது.

இன்று மற்றும் எதிர்வரும் 14ஆம், 16ஆம் திகதிகளிலும் டீசல் அடங்கிய கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன. (அ)

## பரீட்சை மண்டபத்தினுள் மாணவி துஷ்பிரயோகம்

### கண்காணிப்பாளர் கைது

கொழும்பு, மே 31

கல்விப் பொதுதராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவியொருவர் பரீட்சை மண்டபத்தில் வைத்தே பரீட்சை மேற்பார்வையாளரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த அதிர்ச்சி சம்பவம் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

அனுராதபுரம் மாவட்டத்தில், ஹிடோகம பொலிஸ் பிரிவில் இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் வரலாற்று பாட பரீட்சைக்கு தோற்றிய மாணவியொருவரே பரீட்சை மண்டபத்தில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

மாணவிக்கு பரீட்சை எழுத உதவி செய்வதாகக் கூறி பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவியின் முகத்தில் முத்தமிட்ட கண்காணிப்பாளர், மாணவியின் மார்பைத் தொட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து அன்றே ஆசிரியர் ஒருவரிடம் மாணவி புகார் அளித்துள்ளார்

எனினும், நடவடிக்கை எடுக்கப்படாததையடுத்து, 26ஆம் திகதி தனது தாயாருடன் சென்று, ஹிடோகம பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து கண்காணிப்பாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பரீட்சைக் கண்காணிப்பாளரான ஆசிரியர், சம்பவத்தை மூடி மறைக்க மாணவி தரப்புக்கு பணம் வழங்க முயன்றதாகவும் தெரிய வருகிறது.

பாதிக்கப்பட்ட மாணவி க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்று வருகிறார். சாதாரண தரத்தில் சித்தியடையாத வரலாற்று பாடத்தில் இந்த வருடம் தோற்றியுள்ளார். (அ)

## இரண்டு பொலிஸார் மீது தாக்குதல் வானத்தை நோக்கிப் பொலிஸ் சூடு!

கொழும்பு, மே 31

பலப்பிட்டி பிரதேசத்தில் போதையில் இருந்த குழுவினரால் தாக்கப்பட்டதில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.

அஹூங்கல்ல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸாரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு பலப்பிட்டி பகுதியில் உள்ள வீதியொன்றில் இருந்து விலகிச் செல்லுமாறு பணிப்புரை விடுத்ததையடுத்து, இரண்டு பொலிஸாரும் குழுவினரால் தாக்கப்பட்டுள்ளனர். குழுவை கலைக்க வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டதை பொலிஸார் உறுதி செய்தனர். இந்த சம்பவம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த சந்தேக நபர் மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பலப்பிட்டி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)



(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## இந்திய நிவாரணப் பொதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தன

### உடனடியாகவே விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

**தமிழக அரசின்நிவாரணப் பொருள்கள் யாழ். குடாநாட்டுக்கு நேற்று ரயிலில் எடுத்து வரப்பட்டு உடனடியாகவே விநியோகம் இடம் பெற்றது.**

இந்தியாவின் தமிழ்நாடு முதலமைச்சரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்கள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட ரயில் மூலம் நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

யாழ்ப்பாணத்துக்கு அனுமதிக்கப்பட்ட பொருள்களில் 40 வீதமானவற்றை இந்த ரயிலில் ஏற்றக்கூடிய வசதிகள் காணப்பட்டமையால் யாழ்ப்பாணத்துக்கு அனுமதிக்கப்பட்ட 20 ஆயிரம் அரிசி மூடைகளில் 8 ஆயிரத்து 755 மூடைகளும், 500 பைக்கற் பால்மாவும் மட்டுமே தற்போது எடுத்து வரப்பட்டன.

இவ்வாறு எடுத்து வரப்பட்ட பொருள்களில் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குரியவை பளை ரயில் நிலையத்திலும், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு ரியவை சாவகச்சேரி ரயில் நிலையத்திலும் இறக்கப்பட்டன.

அதேநேரம் எஞ்சியவை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வைத்து யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரனால் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டன. மாவட்ட செயலாளர் அதனை பிரதேச செயலாளர்களிடம் கையளித்தார். இந்தப் பொருள்களில் வேலணை பிரதேச செய லகப் பிரிவில் 3,000 குடும்பங்களுக்கும்,

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் 2,750 குடும்பங்களுக்கும், காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 2,500 குடும்பங்களுக்கும் நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவில் 1,200 குடும்பங்களுக்கும், மருதங்கேணி செயலகப் பிரிவில் 3,750 குடும்பங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட அளவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

கொண்டு வரப்பட்ட பொருட்கள் ரயில் நிலையத்தில் வைத்து உடனடியாகவே பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள், இந்திய துணை தூதரக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், கிராம சேவகர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-03)

### முட்டை, கோழி இறைச்சி

## விலை மேலும் அதிகரிப்பு?

கொழும்பு, மே 31

எதிர்காலத்தில், முட்டை ஒன்றின் விலை 50 ரூபா வரையில் அதிகரிக்கக்கூடும் என அகில இலங்கை கோழிப் பண்ணை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், கோழி இறைச்சி கிலோ ஒன்றின் விலை 1,200 ரூபா வரையில் அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## 21ஆவது சட்டத் திருத்தத்தை சகலரும் ஆதரிக்கவேண்டும்

### டலஸ் அழகப்பெரும கோரிக்கை



கொழும்பு, மே 31

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்கவேண்டும் என முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், பொருளாதார மீட்சியை அதிகரிக்கவும் அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் அவசியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

உத்தேச திருத்தமானது கடந்த கால குறைபாடுகளை போக்க நல்லதொரு ஆரம்பம் எனவும், பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், பொருளாதார மீட்சியை உயர்த்தவும் இது உதவும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## அரசுக்கு அதிக நட்டத்தை ஏற்படுத்தும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம்!

கொழும்பு, மே 31

இலங்கை அரசாங்கத்துக்கு சொந்தமான அதிக நட்டத்தை ஏற்படுத்தும் நான்கு நிறுவனங்களில் ஸ்ரீ லங்கன் விமான சேவையும் ஒன்றாகும் என சுதந்திரமாக மதிப்பிடும் அமைப்பான அட்வகேற்றா தெரிவித்துள்ளது.

இதன் செயல்பாடு காரணமாக பொது நிதி வீணாக விரையமாவதாக அந்த அமைப்பின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதன் மூலம் மேலும் ஏற்படக்கூடிய நட்டத்தைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும் என அந்த அமைப்பினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த 2021 ஜூலை வரையிலான காலப் பகுதியினில் கிட்டத்தட்ட 372 பில்லியன் ரூபா நட்டம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நட்டத்தில் இருந்து மீள்வதற்கு பல பரிந்துரைகள் அட்வகேற்றா அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## சிறுமி ஆயிஷா மரணம் மேலும் இருவர் கைது!

கொழும்பு, மே 31

பண்டாரகம - அட்டுலுகம பிரதேசத்தில் 9 வயது சிறுமியின் மரணம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் கீரை தோட்ட தொழிலாளர் என்பது தெரிய வந்துள்ளது.

அவரது வீட்டில் உள்ள கட்டிலுக்கு அடியில் இருந்து சேறு படிந்திருந்த நிலையில் சாரம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கீரை தோட்டத்தை அண்டிய காணியொன்றில் உள்ள சதுப்பு நிலத்தில் இருந்தே, உயிரிழந்த நிலையில் சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கோட்டா போனால் பஸில் வருவார் அவதானமாக நடந்துகொள்ளுங்கள்

## கூறுகிறார் விஜேதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, மே. 31

**"இளைஞர்களின் முக்கிய கோரிக்கை கோட்டா கோ கம. கோட்டா வெளியேறினால் ஜனாதிபதி யார்? பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. அப்படியானால் பஸில் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகலாம். இது நல்லதா என்று இளைஞர்களிடம் கேட்க விரும்புகிறேன். எனவே அவதானமாக செயற்படுங்கள்."**

-இவ்வாறு நீதியமைச்சர் சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் கோரிக்கைக்கு அமைவாக பொலிஸ்துறையில் மேற் கொள்ளப்படும் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் அனைத்தையும் உடனடியாக இரத்துச் செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு நீதியமைச்சர் என்ற ரீதியில் பணிப்புரை விடுத்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

தகுதி மற்றும் தகுதியின் அடிப்படையில் உரிய அதிகாரிகளை நியமித்து, பொலிஸ் துறையை உடனடியாக மறுசீரமைக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் காலை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேரில் சென்று சந்திக்க கண்டிக்கு சென்ற அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாடு தற்போது பொருளாதார ரீதியாக திவாலாகி உள்ளது. இதனால், சமூக கொந்தளிப்பும், இளைஞர்களின் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மையே.

இதனை நிவர்த்தி செய்வதற்கு அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள் அமர்ந்து நிறைவேற்று ஜனாதிபதியின் வரம்பற்ற அதிகாரங்களை பாராளுமன்றம் உட்பட அரச நிறுவனங்களுக்கு வழங்கி மக்களின் நம்பிக்கையை பெற்று வெளிப்படையான அரசாங்கத்தை பேணுவதே எம்மால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடாகும்.

முதற்கட்டமாக, 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் மூலம் ஊழல், மோசடி மற்றும் வினைத்திறன் இல்லாத பொது நிறுவனங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



ஆனால் 20ஆவது திருத்தம் அதை ரத்து செய்து தனி நபருக்கு அதிகாரத்தை பகிர்ந்தளித்தது.

அத்துடன் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் பாராளுமன்றத்துக்கு வந்து நிதியமைச்சை பொறுப்பேற்று நாட்டின் பொருளாதாரத்தை சீரழிப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளார். அதைச் சீர்செய்யும் நம்பிக்கையில் நான் புதிய பிரதமரின் கீழ் அரசாங்கத்தில் இணைந்தேன்.

இத்தருணத்தில் எதிர்க்கட்சிகளுக்கு ஏதேனும் பிரச்னைகள் இருந்தால் அவை குறித்து விவாதிக்கவேண்டும். அவை 19 மற்றும் 19க்கு அப்பால் செல்லும் அமைப்பைக் குறிக்கின்றன. அமைச்சுக்களை வைத்திருக்கும் அதிகாரத்தை நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோருவதே அவர்களின் பிரச்னை. எமது நாட்டின் அரசியலமைப்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அடிப்படையாகக் கொண்டது. தேசிய பாதுகாப்புக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்பு என்பது அதன் முக்கிய ஷரத்துகளில் ஒன்றாகும்.

நாட்டின் தலைமைத் தளபதி நிறைவேற்று ஜனாதிபதி. அதன்படி, பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதியிடம் இருந்து நீக்கினால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும். இது சாத்தியமா இல்லையா என்பதை மக்கள் புரிந்துகொள்கிறார்கள். இதை எதிர்க்கட்சிகளும் புரிந்து கொள்ளும் என நம்புகிறோம்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் ஒன்றுதான். மக்கள் வாக்கு மூலம் வந்தாலும் அல்லது தேசியப் பட்டியலில் இருந்து வந்தாலும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கணக்கிடப்படுகின்றனர். ஒரு அரசாங்கம் தோல்வியடையும் போது அதற்கு எதிர்க்கட்சியும் எதிர்க்கட்சித் தலைவரும் பொறுப்பேற்க வேண்டும்.

ஒரு மாத காலமாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடி அரசாங்கத்தை கைப்பற்று மாறு கோரினோம். பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்றோம். எங்கள் 41 பாராளுமன்ற உறுப்பினர் குழுவும் பிரதான எதிர்க்கட்சியும் இணைந்து அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்று நான் பரிந்துரைத்தேன். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரும் மறுத்துவிட்டார்.

ஒவ்வொரு அரசாங்கத்தாலும் நான் அடிக்கப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு அரச தலைவருடனும் நான் மோதியுள்ளேன் .இந்த ஜனாதிபதியுடன் மோதியவர்கள் அரசியலில் இல்லை .

இளைஞர்களின் முக்கிய கோரிக்கை கோட்டா கோ கம. கோட்டா வெளியேறினால் ஜனாதிபதி யார்? பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. அப்படியானால் பஸில் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகலாம். இது நல்லதா என்று இளைஞர்களிடம் கேட்க விரும்புகிறேன். எனவே அவதானமாக செயற்படுங்கள்.

21ஐ நிறைவேற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்து, மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நாட்டு மக்களின் பூரண பாதுகாப்புடன் புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற வேண்டும். 21ஐக் கொண்டுவருவதை நாங்கள் ஒருபோதும் தாமதப்படுத்தமாட்டோம்-என்றார்.

(அ)

# சஷி வீரவன்ஸ பிணை மனு இன்று வரை ஒத்திவைப்பு!

கொழும்பு, மே. 31

போலி கடவுச்சீட்டு வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் மனைவி சசி வீரவன்ஸ தாக்கல் செய்த பிணை மனு மீதான பரிசீலனை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க அறிவித்தார்.

இந்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபருக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கீழ் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை எதிர்த்து மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்படும் என குறிப்பிட்டு, கொழும்பு நீதவான் நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக பொய்யான தகவல்களை வழங்கியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சசி வீரவன்ஸவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன் ரூ.100,000 அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை செலுத்த தவறினால் கூடுதலாக 6 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என நீதிவான் அறிவித்தார். (அ)

# அரச செலவீனங்களை குறைப்பதற்கு ஏற்பாடு!

கொழும்பு,மே. 31

அரச செலவுகள் 250 பில்லியன் ரூபாவினால் குறைக்கப்பட உள்ளதென தெரியவருகின்றது.

அரசின் இந்த ஆண்டுக்கான செலவுகளை 250 பில்லியன்களினால் குறைப்பது குறித்த வழிமுறைகளை திறைசேரி பரிந்துரை செய்துள்ளது.

ஏற்கனவே இந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்திற்கு பதிலீடாக இடைக்கால வரவு செலவுத் திட்ட மொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதில் குறிப்பாக அரச மூலதன செலவுகள் வெகுவாக குறைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு இரண்டு வாரங்கள் விடுமுறை!

கொழும்பு, மே. 31



மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று முதல் இரண்டு வாரங்களுக்கு விடுமுறையில் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கடந்த வாரம் இரண்டு வாரங்களுக்கு விடுமுறை தேவை என பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருந்தார்.

விடுமுறைக்கு அனுமதி கிடைத்ததை அடுத்து, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கடமைகளை உள்ளடக்கியதாக பிரதி பொலிஸ் மா அதிபர் ஜகத் பலிஹக்கார நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# மன்னாரில் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்திய நிவாரண பொருள் விநியோகம்

மன்னார், மே. 31

இலங்கையில் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவு பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ள நிலையில் குறித்த உலர் உணவு பொருட்கள் அனைத்து மாவட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 25,000 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெலிடம் கையளிக்கப்பட்டன.




குறித்த உணவுப்பொருட்களை இந்திய தூதுவர் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

முதற் கட்டமாக 6500 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 65,000 கிலோ உணவுப் பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் மடு பிரதேச செயலகத்துக்கும் பொருட்கள் கொண்டு செல்லப்பட உள்ள நிலையில் இன்று நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலகங்களுக்கு, உணவுப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு பயனாளர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

(அ)

# பட்டினிச்சாவை தவிர்ப்பதற்கு வீட்டுத்தோட்டம் செய்யுங்கள்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர அழைப்பு

கொழும்பு, மே 31

**எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படவுள்ள பஞ்சத்தை எதிர்கொள்வதற்கு கிடைக்கக்கூடிய அனைத்து நிலங்களிலும் உணவுப் பயிர்களை பயிரிடுவது மிகவும் அவசியமானது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படவுள்ள பஞ்சத்தை எதிர்கொள்வதற்கான சவால்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"உணவு கிடைக்கவில்லை என்றால் நிதி இருப்பதில் அர்த்தமில்லை. எனவே, கிடைக்கக் கூடிய ஒவ்வொரு நிலத்திலும் உணவுப் பயிர்களை வளர்க்க



வேண்டும், "என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அனைத்து அமைச்சர்களும் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் உணவுப் பயிர்களை பயிரிடத் தொடங்க வேண்டும் என்பதோடு நாடு எதிர்கொள்ளும் சவாலை முறியடிக்க, விவசாய அதிகாரிகளுடன் அரசு ஊழியர்களும் இணைந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# மழையுடனான வானிலையும் காற்றின் வேகமும் அதிகரிக்கும்

கொழும்பு, மே 31

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலையும் காற்று நிலைமையும் அடுத்த சில நாட்களில் சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, புத்தளம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில்75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது

அனுராதபுரம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்யும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# ஆயிஷா மரணத்துக்கு நீதி கோரி இன்று மன்னாரில் ஆர்ப்பாட்டம்!

மன்னார், மே. 31

சிறுமி ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நீதிக்கான போராட்டம் இடம்பெறவுள்ளது.

மன்னார் பஜார் பகுதியில் இந்த போராட்டம் இடம்பெற உள்ளது.

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள பெண்கள் வலையமைப்பினர், சமூக ஆர்வலர் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து தொடர்ச்சியாக நாட்டில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கவும் அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பெண்கள் சிறுவர்களுக்கு விரைவில் நீதி நிலை நாட்டப்படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தியும் 8 மாவட்டங்களில் இன்று போராட்டம் இடம்பெறவுள்ளது.

எனவே பொதுமக்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு சிறுவர்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றிணையுமாறு பெண்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# உணவுக்காக 12 கோடி ரூபா பாராளுமன்றத்தில் செலவு!

கொழும்பு, மே 31

பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் விருந்தினர்களது உணவு மற்றும் சிற்றுண்டி செலவு, குடிதண்ணீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி ஆகியவற்றுக்காக வருடாந்தம் 35 கோடி ரூபா வரை செலவிடப்படுவதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உணவு, சிற்றுண்டி வகைகளுக்காக வருடாந்தம் 12 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

அதேபோல் பாராளுமன்றத்தில் குடிதண்ணீருக்காக வருடாந்தம் 90 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தில் மின்சாரத்திற்காக வருடாந்தம் எட்டு கோடி ரூபாவும் தொலைபேசிக்காக 14 கோடி ரூபாவும் செலவிடப்படுவதாக பாராளுமன்ற நிதிப் பிரிவு தெரிவிக்கின்றது. (அ)

# 15 வயதுடைய மாணவனை காணவில்லை

கொழும்பு, மே 31

அவிசாவளை குருகல்ல பிரதேசத்தில் பாடசாலை மாணவனொருவன் காணாமல்போயுள்ளதாக அவிசாவளை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவனின் பெற்றோர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காணாமல்போனவர் 15 வய துடைய பாடசாலை மாணவர் என்றும் இவர் ஏற்கனவே வீட்டை விட்டு வெளியேறி நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து சில நாட்கள் கழித்து திரும்பி வந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பஸ்தியன் மாவத்தையில் உள்ள பஸ் நிலையத்தில் துப்பாக்கி சூடு

## ஒருவர் பலி; மற்றொருவர் படுகாயம்

கொழும்பு, மே 31

புறக்கோட்டை, பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் பலத்த காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# சுகாதார ஊழியர்களுக்கு விசேட வாராந்த விடுமுறை

கொழும்பு, மே 31

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு விசேட வாராந்த விடுமுறை திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய சுகாதாரத்துறை ஊழியர்கள் அனைவருக்கும் வார நாட்களில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் விசேட விடுமுறை வழங்கப்படவுள்ளது.

சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் நிரப்புவதில் முன்னுரிமை அளிக்கும் வகையில் வழங்கப்பட்ட அட்டையும் பயனற்றுப் போயுள்ளதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

குறிப்பாக குறித்த அட்டையைப் பயன்படுத்தி எரிபொருள் நிரப்ப முயற்சித்த சில மருத்துவர்கள் அச்சுறுத்தப்பட்டிருந்ததுடன் அவர்கள் மீது தாக்குதல் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையிலேயே சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு விசேட வாராந்த விடுமுறை திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஜனாதிபதி செயலணியிலிருந்து விலகியுள்ளார் கலீலுர் ரஹ்மான்

கொழும்பு, மே 31

'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியிலிருந்து விலகுவதாக கலீலுர் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் தனியார் சட்டங்களில் திருத்தம் செய்து அவற்றை பாதுகாப்பதற்கு பதிலாக அந்த சட்டங்களை பறித்தெடுப்பதற்கான முயற்சிகளை ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செலணி, மேற்கொண்டிருப்பதாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி முன்வைக்கவுள்ள அறிக்கையில் தம்மால் கையொப்பமிட முடியாது என கலீலுர் ரஹ்மான் அனுப்பி வைத்துள்ள 6 பக்கங்கள் கொண்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயலணியில் இருந்து விலகிய மூன்றாவது முஸ்லிம் உறுப்பினர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயிலில் முற்பதிவு இருக்கை கட்டணம் நாளை அதிகரிப்பு

கொழும்பு, மே 31

ரயிலில் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளுக்கான கட்டணம் நாளை முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட நட்டம் காரணமாக முன்பதிவு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜய சுந்தர தெரிவித்தார்.

அதன்படி, முன்பதிவு செய்யப்பட்ட ஆசனங்களுக்கான கட்டணம் நாளை முதலாம் திகதி முதல் 30 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# இந்தியாவின் பொருளாதார மறுசீரமைப்புக்கு இதுவே நேரம்

—— ப.சிதம்பரம்



இந்தியப் பொருளாதாரக் கொள்கையில் மிகப் பெரிய மாற்றம் செய்து 31 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன என்பதையே என்னால் நம்ப முடியவில்லை. இந்திய ரூபாயின் மதிப்பு 1991 ஜூலை 1இல் அரசால் குறைக்கப்பட்டது. அது மிகவும் செயல்திறன் மிக்க முடிவு, பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது, பகிரங்கமாகப் பலராலும் கண்டிக்கப்பட்டதும்கூட. எதிர்க் கட்சிகள் மிகத் தீவிரமாக எதிர்த்ததால், சீர்திருத்த நடவடிக்கையின் அடுத்த கட்டங்களைச் சில காலத்துக்குக் கிடப்பில் போடக்கூட அன்றைய பிரதமர் பி.வி.நரசிம்ம ராவ் விரும்பினார். பிரதமரின் விருப்பப்படி அடுத்த நடவடிக்கைகளை நிறுத்திவிட்டதைப் போலக்கூட நிதியமைச்சர் மன்மோகன் சிங் 'பாவனை' செய்தார்.

இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் டாக்டர் சி.ரங்கராஜன் 'எவர் கண்ணிலும்' சில நாள்களுக்குச் சிக்கவே இல்லை. அடுத்த 48 மணி நேரத்துக்குள்ளாக மீண்டும் ஒருமுறை ரூபாயின் மதிப்பு மேலும் குறைக்கப்பட்டது. இரண்டே இரண்டு அடிகள் எடுத்து வைத்து ஆடிய அந்த நடனம் - மிகச் சிறப்பாக முன்கூட்டியே ஆடிப் பார்க்கப்பட்டு, உரிய நேரத்தில் பிசிறில்லாமல் அரங்கேற்றப்பட்டது.

அந்த நடவடிக்கைக்குப் பிறகு என்ன நடந்தது என்பதையும் இரண்டே வார்த்தைகளில் சொல்லிவிடலாம், 'முழுக்க முழுக்க துணிச்சல் மிக்கது'. அடுத்தடுத்த நடவடிக்கைகளாக - தடையற்ற வர்த்தகக் கொள்கை, தாராளமயத் தொழில் (உற்பத்தி) கொள்கை ஆகியவற்றை அறிவித்தது அரசு. புதிய பாதையைக் காட்டும் வகையில் மத்திய நிதிநிலை அறிக்கையையும் வரிகளைக் குறைத்தும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும் தயாரித்தது. உலகமே நிமிர்ந்து உட்கார்ந்து இந்திய அரசின் துணிச்சலையும் தெளிவையும் வேகத்தையும் கவனத்தில் கொண்டது. கம்பீரமான இந்திய யானை ஆடத் தொடங்கியது.

### வெளிப்படையான சந்தைக்கு ஆதரவு

காங்கிரஸ் தலைமையிலான அரசு பொருளாதாரத்தில் தாராளமயக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இதனால் நாடு பல்வேறு துறைகளில் ஏராளமான நன்மைகளைப் பெற்றது. நாட்டின் செல்வ வளம் பெருகியது, புதிய தொழில்கள், புதிய தொழில் முனைவோர்கள் உருவாக முடிந்தது.

நாட்டின் மத்திய தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை கோடிகளில் பெருகியது. கோடிக்கணக்கான புதிய, உயர் வருவாய் தரும் வேலைவாய்ப்புகள் ஏற்பட்டன. ஏற்றுமதி பல மடங்காக உயர்ந்தது. 27 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக்கோட்டிலிருந்து மீண்டனர்.

### வறுமை - பட்டினி அதிகம்

இருப்பினும், கோடிக்கணக்கான மக்கள் இன்னமும் வறுமைக்கோட்டுக்கும் கீழேதான் வாழ்கின்றனர் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. நாட்டில் உணவு கிடைக்காததால் பட்டினி கிடப்போர் எண்ணிக்கை இன்றைக்கும் இருக்கிறது. உலக பட்டினி குறியீட்டெண் 2021இல், இந்தியா 101வது இடத்தில் உள்ளது, மொத்தமுள்ள பட்டினி நாடுகள் 116. பெண்களையும் குழந்தைகளையும் பாதிக்கும் ஊட்டச்சத்துக் குறைபாடு நாடு முழுக்கப் பரவிக் கிடப்பதை 'தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு-5' தெரிவிக்கிறது.

வருடாந்திர கல்வி ஆண்டறிக்கைப் படி (அசர்), ஏழைக் குழந்தைகள் தாங்கள் பயிலும் வகுப்புக்கேற்றபடிக்கு கணிதம், அறிவியல், ஆங்கிலம் போன்ற பாடங்களைப் புரிந்துகொள்ள முடியாதபடிக்குக் குறைபாடுகள் தொடர்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய அளவில் நிலவுகிறது. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பொருள்களின் விலை கடுமையாக உயர்கிறது. மக்களுடைய வருமானம், செல்வம் ஆகியவற்றிலும் ஆண்கள் - பெண்கள் ஆகியோருக்கு இடையிலும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருகின்றன. நாட்டின் வெவ்வேறு மாநிலங்களுக்கு இடையிலும் ஏற்றத்தாழ்வுகள் பெரிதாகிவருகின்றன. மக்களில் பல பிரிவினருக்கு நாட்டின் வளர்ச்சியில் நியாயமான - சமமான வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

வெளிப்படையான, தடைகள் ஏதுமற்ற, சந்தை அடிப்படையிலான பொருளாதாரப் பாதையிலிருந்து நம்மால் இப்போது விலகிச் செல்ல முடியாது. அது தற்கொலைக்கு ஒப்பானது. இருப்பினும் உலக அளவிலும் உள்நாட்டிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஏற்ப நம்முடைய பொருளாதாரக் கொள்கைகளில் மறுசீர்மை செய்வது அவசியம். அதற்கு 1991இல் இருந்ததைப் போன்ற துணிச்சலும், தெளிவான பார்வையும் செயல் வேகமும் அரசுக்கு இருக்க வேண்டும்.

### உலக - உள்நாட்டு மாற்றங்கள்

உலக அளவிலான மாற்றங்களைப் பரிசீலிப்போம். பணக்கார நாடுகள் மேலும் பணக்கார நாடுகளாகிவிட்டன. சீனத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இடைவெளி மேலும் அதிகரித்துவிட்டது. 2022இல் சீனத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி வீதம் (ஜிடிபி) 16.7 டிரில்லியன் டாலர்களாக இருக்கும். இந்தியாவின் ஜிடிபி 3 டிரில்லியன் டாலர்கள். டிஜிட்டல் (எண்ம) தொழில்நுட்பம் மனிதர்களுடைய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஊடுருவிவிடும். தரவுகள்தான் நாடுகளுக்கு இனி புதிய செல்வமாக அமையும்.

இயந்திரங்கள் உதவியுடன் உற்பத்தி செய்தல், மனித இயந்திரப் பயன்பாடு, இயந்திரக் கற்றல் மூலம் பெறப்படும் அறிவு - செயற்கை நுண்ணறிவு ஆகியவைதான் இனி உலகில் ஆதிக்கம் செலுத்தும். மனிதர்களால் செய்யக்கூடியவை இவையிவைதான் என்று தெளிவாக வரையறுக்கப் பட்டுவிடும். புதிய உலகில் இனி 5ஜி தொழில்நுட்பம், இணையதளம் 3.0, பிளாக்செயின், மெட்டாவெர்ஸ் மற்றும் புற உலகம் அறியாத நவீனங்களுக்குத்தான் இடமிருக்கும்.

பருவநிலை மாறுதல்கள் - விளைவுகளை உலகம் மீது ஏற்படுத்தும் அதைச் சமாளிப்பது மனித குலத்துக்கு மிகப் பெரிய சவாலாகத் திகழும். புதைபடிம எரிபொருள்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு - தட்டுப்பாடு ஏற்படும், பிறகு இந்தப் பூவுலகம் நிலைத்திருக்கவும் நம்முடைய அன்றாடப் பிழைப்பு இடையூறின்றி தொடரவும் புதுப்பிக்கத்தக்க இயற்கை வளங்களைப் பயன்படுத்தியே தீர வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவோம்.

உள்நாட்டு நிகழ்வுகளைப் பார்ப்போம். நாட்டின் ஒட்டுமொத்த கருத்தரிப்பு வீதம் 2.0 ஆகக் குறைந்திருக்கிறது. அது மக்கள்தொகையை இட்டு நிரப்பக்கூடிய மாற்று விகிதத்துக்கும் குறைவாக இருக்கிறது. 15 வயதுக்கும் கீழுள்ள மக்கள் எண்ணிக்கை 2015-16இல் 28.6 வீதமாக இருந்தது, இப்போது 26.5 வீதமாக் குறைந்துவிட்டது. இளவயது மக்கள்தொகையால் சமூகத்துக்குக் கிடைக்கக்கூடிய லாப அம்சம் குறையத் தொடங்கிவிட்டதை இது காட்டுகிறது. விவசாயிகளின் சராசரி உற்பத்தி அளவு அதிகரித்திருக்கிறது. இருந்தும் அவர்களுடைய பொருளாதார அந்தஸ்து மாறாமலேயே நீடிக்கிறது. விவசாயத்தை லாபகரமான தொழிலாக மக்கள் கருதுவதில்லை, தங்களுடைய அடுத்த தலைமுறையினரும் விவசாயத்தில் ஈடுபடுவதை இப்போதைய விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை.

நகரமயமாதல் வேகமாக நடைபெறுகிறது, நகர்ப்புற வேலையில்லாத் திண்டாட்ட விகிதமும் உயர்ந்துவருகிறது. டிஜிட்டல்மயம் விரிவடைகிறது, அதனால் ஏழைகளுக்கும் நடுத்தர வர்க்கம் - பணக்காரர்களுக்கும் இடையிலான பிளவும் அதிகரிக்கிறது. பெரும்பான்மையின ஆதிக்கம், மத அடிப்படையில் மக்களிடையே பிளவு, சமூகத்தில் சில பிரிவினருக்கு எதிராக திட்டமிட்டு பரப்பப்படும் வெறுப்புணர்வு போன்றவை பொருளாதாரத்தைப் பெருமளவு சேதப்படுத்திவிடும். நாட்டின் அரசியல் - பொருளாதாரக் கட்டமைப்புகளிலிருந்து 20 வீத மக்களை விலக்கி வைக்கும் எந்த நாடும் பொருளாதார வல்லரசாக முடியாது.

### தனிமைப்படுத்துவது சுய தோல்விக்கான வழி

எல்லாவிதக் கொள்கைகளையும் மறுஆய்வுக்கு உள்படுத்த வேண்டியது கட்டாயம். வேலைவாய்ப்பு பெருகாத பொருளாதார வளர்ச்சியை நாடு ஏற்காது. அதிலும் குறிப்பாக, வேலைவாய்ப்பில் வளர்ச்சியே இல்லாத கடந்த சில ஆண்டு கால பொருளாதார வளர்ச்சியை ஏற்க முடி யாது. பொருளாதார வளர்ச்சி என்பதன் அடிப்படையே வேலைவாய்ப்பு பெருகுவதாகத்தான் இருக்க முடியும்.

வேலைவாய்ப்பை உருவாக்குவதன் மூலம்தான் பிற துறைகளில் வளர்ச்சியை விரிவுபடுத்த முடியும். ஆண்டுக்கு 2 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று மிகவும் உன்னதமான வாக்குறுதியைக் கொடுத்து ஆட்சிக்கு வந்த மோடி அரசு, பக்கோடா தயாரித்து விற்பதுகூட வேலைவாய்ப்புதான் எனப் பரிதாபகரமான விளக்கத்தை அளிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

நல்ல எதிர்காலம் அமையும் என்கிற நம்பிக்கையில் கடுமையாக உழைத்து, வருமானத்தையெல்லாம் கொட்டி தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைத்த குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெருகாததால் மோடி அரசால் நட்டாற்றில் விடப்பட்டுள்ளன. இதற்குப் பிறகும் மோடி அரசு தேர்தலில் தண்டிக்கப்படாமல் தப்பிக்கக்கூடும், இந்துத்துவக் கருத்துகளைச் சொல்லி மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி வெற்றி பெறக்கூடும்.

இந்துத்துவக் கருத்துகளால் புதிய வேலைவாய்ப்பை உருவாக்கிவிட முடியாது என்பதை இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கிய சமூகத்தவர்கள் அல்லது பிற மதங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது மதங்களையே விரும்பாத நாத்திகக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் விரைவில் உணர்வார்கள்.

### ஒன்றிய - மாநில அரசு உறவுகள்

இந்த உரையாடல், ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையில் மாறிவிட்ட உறவு நிலைமைக்கு தவிர்க்க முடியாதபடிக்கு இட்டுச் செல்கிறது. இதற்கு முன்னால் எப்போதுமே இப்படி ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு உரசல்கள் - சிக்கல்கள் நிரம்பியதாக மாறியதில்லை. மாநிலங்களின் நிதிநிலைமையும் இதற்கு முன்னால் எப்போதுமே இப்படி கவலைக்குரியதாக இருக்கவில்லை. சுயமாக வருவாய் திரட்டும் மூலங்கள் மாநில அரசுகளுக்கு வற்றிவிட்டன.

பொது சரக்கு சேவை வரி (ஜிஎஸ்டி) தொடர்பாக அனைத்து இடங்களிலும் கடுமையான அதிருப்தியே நிலவுகிறது. அதை ஒன்றிய அரசு நிர்வகிக்கும் விதம் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒன்றிய - மாநில அரசுகளுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை குறைந்து அவநம்பிக்கை மிகுந்துவருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியதைப் போல பொது சரக்கு, சேவை வரி விதிப்பு முறையிலிருந்து மாநிலங்கள் வெளியேற வேண்டும் என்கிற குரல்கள் கூட கேட்கத் தொடங்கிவிட்டன.

மாநிலங்களின் சட்டமியற்றும் அதிகாரங்களிலும் ஒன்றிய அரசு ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டது. இதற்கு தனது நிர்வாக அதிகாரங்களையும் நிதி அதிகாரங்களையும் பயன்படுத்தி மாநிலங்களின் கைகளை முறுக்கி, எதிர்ப்பு ஏதுமின்றிப் பணிய வைக்கிறது. பிரதமர் மோடி தலைமையிலான அரசின் கொள்கைகள் மட்டுமல்ல, அந்தக் கொள்கைகளை அமல்படுத்த அது பயன்படுத்தும் பாதையும்கூட கூட்டாட்சித் தத்துவத்தையே நாசமாக்கிவிடும்.

(கட்டுரையாளர் முன்னாள் இந்திய நிதி அமைச்சர்)

ஈழநாடு



# இலங்கைக்கு தேவை ஒரு லீ குவான் யூ: ரணில் மாறுவாரா?

**- வி.தேவராஜ்**

‘கோட்டப கோ கம’ என்பது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பம் அவர்களுடன் இணைந்த ஆளும் வர்க்கம் அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டும். ஊழல் மோசடிகள் அற்ற புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படல் வேண்டும் என்ற கருத்தியலில் கட்டிஎழுப்பப்பட்டதாகும்.

இது இலங்கைக்கான பொதுவான கருத்தியலாக பொதுவில் பேசப்பட்ட போதும் உண்மையில் ‘கோட்டா கோ கம’ வில் குடியேறி இருக்கின்ற இளைஞர் யுவதிகள் மற்றும் இவர்களைத் தத்தெடுத்துக் கொண்டுள்ள தென்னிலங்கை மக்களுமே இந்தக் கருத்தியலுக்கான சொந்தக்காரர்களாகும்.

ஏனெனில், வழமையாக தென்னிலங்கையில் முன்வைக்கப்படும் அரசியல் கருத்தியல்கள் நடைமுறையில் தென்னிலங்கையைநோக்கியதாவே அமைவது வழமை.

2010 ஆம் ஆண்டு அதாவது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து நல்லாட்சி குறித்த அரசியல் கருத்தியல் முன்வைக்கப்பட்டது.

அவ்வேளையில் கொழும்பில் ஒரு பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுடனான ஊடக சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு தமிழ் ஊடகவியலாளர் தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க வேண்டும். அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென உரத்துக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்.

இதனைக் கவனித்த ஒரு பெரும் பான்மை இன சிரேஷ்ட ஊடகவியலாளர் என்னிடம் தமிழ் ஊடகவியலாளர் என்ன கூறுகின்றார் எனக் கேட்டார். நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறினேன். அதனைக் கேட்ட அந்த ஊடகவியலாளர் ‘எங்களுக்கு நல்லாட்சி வேண்டும். அதற்காக நாம் சரத்பொன்சேகாவை ஆதரிக்கின்றோம். தமிழர் களுக்கு சரத்பொன்சேகாவும் மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்று தானே. இருவருமே தமிழர்களுக்கு எதிராக போரிட்டவர்கள்தானே’ என்று குறிப்பிட்டார்.

அதாவது நல்லாட்சி என்பது கூட அந்த ஊடகவியலாளரின் பார்வையில் ‘அது அவர்களுக்கானதாக - தென்னிலங்கைக்கு உரியதாகவே’ பார்க்கப்பட்டது.

இதே நிலைமைதான் இன்றும். ‘கோட்டா கோ கம’ அரசியல் கருத்தியல் நடைமுறைக்கு வரு மாயின் அது தென்னிலங் கைக்கு ஏற்பவே வடிவமைக்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்திருக்காது. அதே வேளையில் ‘கோட்டா கோ கம’ அரசியல் கருத்தியலுக்கு மாறாக ரணில் விக்ரம சிங்கவை பிரதமராக்கி ‘ராஜபக்ஷர்களின் பொதுஜன பெரமுன கட்சியின் நிழல் அரசாங்கத்தை’ அமைத்துக் கொள்வதில் ராஜபக்ஷ குடும்பமும் ஆளும் வர்க்கமும் வெற்றியும் பெற்றுள்ளனர்.

அதாவது ‘புதிய போத்தலில் பழைய வைன்’ என்பதற்குப் பதிலாக ‘பழைய போத்தலில் பழைய வைன்’ கதையாகவே உள்ளது. அதற்கும் அப்பால் ஒருபடி மேல் போய் ‘கோட்டா கோ கம’ அரசியல் கருத்தியலுக்குச் சொந்தக்காரர்கள் கட்சியை உருவாக்கி ‘ஜனநாயக மரபுக்குள் தமது அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்ள முன்வரவேண்டுமென்றும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

அதாவது ராஜபக்ஷர்களினதும் அவர்கள் சார்ந்த அரசியல் அணியினரும் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கு தொடர்ந்தும் வியூகங்களை வகுப்பதையே தென்னிலங்கை அரசியலில் காணக் கூடியதாக இருக்கின்றது.

எனது முந்தைய கட்டுரையில் ‘கோட்டா கோ கம’ போராட்டம் என்பது ‘தேநீர் கோப்பை சூறாவளி’ அல்ல என்பதை ராஜபக்ஷர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருந்தேன். இந்த உண்மையை உணராது ‘கோட்டா கோ கமவில்’ கைவைக்கப் போய் கையைச் சுட்டுக் கொண்டுள்ளனர்.

‘கோதா கோ கம’ 50 நாட்களை எட்டியுள்ள நிலையிலும் போராட்டத்தின் வீரியம் குறைந்ததாக இல்லை.

இந்த இளைஞர் யுவதிகள் போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பாக பல அங்கத்துவ அமைப்புக்களுடன் கலந்துரையாடியுள்ளதுடன் சுமார் 60 சிவில் அமைப்புக்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். அதற்கும் அப்பால் 200 க்கும் மேற்பட்டவர்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுள்ளனர். இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கோரிக்கைகளை வடிவமைத்துள்ளனர்.






‘கோட்டா கோ கம’ போராட்டக்கள இளைஞர் யுவதிகளின் கோரிக்கை இதோ: ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான ராஜபக்ஷ ஆட்சி உடனடியாக அதிகாரத்தை கைவிட வேண்டும். இராஜினாமா செய்த பின்னர் ஆட்சியில் உள்ளவர்கள் இலங்கையின் ஆட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சியில் எந்தவொரு தேவையற்ற செல்வாக்கையும் செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

தேசத்தை மீட்சியின் பாதையில் கொண்டு செல்ல ஒரு இடைக்கால அரசாங்கம் தீர்மானிக்கப்பட்ட காலத்திற்கு (18 மாதங்களுக்கு ) நிறுவப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் 20 ஆவது திருத்த ஒழிப்பு போன்ற அத்தியாவசியத் திருத்தங்கள் கூடிய விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்போதைய நெருக்கடியை நிர்வகிக்க அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மற்றும் அனைத்து செயல்முறைகளும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

நிலவும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மனிதாபிமான நெருக்கடியாக மாறியுள்ளது. எனவே, தற்போது நிலவும் நெருக்கடிகளைத் தீர்க்க குறுகிய நடுத்தர மற்றும் நீண்ட கால தீர்வுகள் தேவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட அனைத்து அதிகாரிகளும் தங்கள் சொத்துக்களை அறிவிக்க வேண்டும் மற்றும் சட்டப்பூர்வ வழிகளில் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துக்களை மீட்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டின் அனைத்து குடிமக்கள் மற்றும் பார்வையாளர்களின் உரிமைகளை மதிக்க சட்டத்தின் ஆட்சி உடனடியாக மீண்டும் நிறுவப்பட வேண்டும்

இலங்கையின் அரசியலமைப்பில் அனைத்து பிரஜைகளுக்கும் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக உள்ளடக்கவும் (இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அது வாழ்வதற்கான உரிமை பற்றிய விதிகளைப் பின்பற்றவும்).

இடைக்கால அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடாத்துவதற்கு தேவையான சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.

அடுத்து என்ன?

இலங்கையின் இளைஞர் யுவதிகள் மற்றும் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நிதர்சனமாக்க இலங்கைக்கு சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ போன்ற ஒரு தலை வரே தேவை. அவ்வாறான ஒரு தலைவரை காணமுடியாதிருப்பது இலங்கைக்கே உரித்தான அரசியல் சாபக்கேடாகும்.

இலங்கையின் தேச பிதா என போற்றப்படும் சேனாநாயக்கவில் இருந்து எஸ். டபிள்யூ.ஆர் . பண் டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாச, மஹிந்த ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ வரை அனைத்து தலைவர்களும் இனவாத சேற்றுக்குள் முளைத்தவர்களே.

எனவேதான் சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ இலங்கை பற்றிக் குறிப்பிடுகையில், ‘ இலங்கை ஒரு போதும் மீண்டும் ஒன்றிணைக்கப்படாது’ எனக் குறிப்பிட்டார். ‘சுதந்திர இலங்கை’ இனத்துவ அரசியல் மொழி மத ரீதியாக துருவமயப் படுத்தப்பட்டுள்ளதினாலேயே ஒன்றுபட்ட இலங்கை ஒரு போதும் சாத்தியமாகாது என சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ குறிப்பிட்டார்.

ஐ.தே.க. தலைவர் ரணில்விக்ரமசிங்கவைப் பொறுத்து தனதும் ஐதே. கவினதும் எதிர்கால அரசியல் தலைவிதியை தீர்மானித்தாக வேண்டிய தீர்மானமிக்க கட்டத்திற்குள் நிற்கின்றார். இதற்காக அரசியல் காய்களை நிறையவே நகர்த்தியாக வேண்டும்.

தனது எதிரிகளை குறிப்பாக சஜித் அணியினரைப் பலவீனப்படுத்தியாக வேண்டும். இந்த வேலைப் பளுக்களுக்கு மத்தியில் ராஜபக்ஷர்களை காப்பாற்றியாக வேண்டும். நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டாக வேண்டும்.

இவைகளுக்கு மத்தியில் ‘கோட்டா கோ கம’ இளைஞர்களும் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் கொண்டுள்ள ‘அரசியல் கருத்தியலுக்கு ஏற்ப புதிய இலங்கையை ‘ பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் சிருஷ்டிக்க முடியுமா?

ஊழல் மோசடிகள் அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியுமா?

‘கோட்டா கோ கம’ இளைஞர்களும் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் அரசியல்வாதிகளினால் கொள்ளையிடப்பட்டதாகக் கூறும் பணத்தை நாட்டின் கஜானாவுக்கு மீள கொண்டு வர முடியுமா?

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு இவைகள்அனைத்துமே பெரும்சவாலாக முன் நிற்கின்றன. தனது கட்சியை தூக்கி நிறுத்த வேண்டிய பெரும் சவாலான சுமையை ரணில் விக்ரமசிங்க தனது முதுகில் சுமந்து கொண்டிருக்கின்றார்.

அவருடைய இரு கால்களிலும் ராஜபக்ஷ குடும்பமும் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற எண்ணிக்கை பலமும் விலங்கிட்டு நிற்கின்றது.

இந்த ஒரு பின்னணியில் சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ போன்றதொரு தலைவராக பிரதமர் பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவால் உருவாக முடியாது.

மொத்தத்தில் தென்னிலங்கை இன்றைய நிலையிலாவது சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ போன்றதொரு தலைவரைத் தேடவில்லையாயின் 21 ஆவது திருத்தம் உட்பட ஒருசில சட்டவாக்க சீர்திருத்தத்துடன் ‘கோட்டா கோ கம’ இளைஞர்களும் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் கனவு கண்டு கொண்டிருக்கின்ற ‘புதிய அரசியல் கருத்தியல்’ கல்லறைக்குள் முடக்கப்பட்டு விடும் என்பது உண்மையாகும்.

இன்றைய நிலையில் தென்னிலங்கையில் வீசுகின்ற ‘புதிய அரசியல் மாற்றத்திற்கான கருத்தியல் ‘தமிழ், முஸ்லிம், மலையக மக்களையும் அணைத்து இணைத்துக் கொண்டு முழு இலங்கையையும் ஒன்றிணைப்பதற்கான கருத்தியலாக மாற்றம் பெற வேண்டும். இதுவே ‘புதிய இலங்கையின் உதயத்திற்கு’ வித்திடுவதாக அமையும்.

‘கோட்டா கோ கம’ இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் வடக்கு - கிழக்கு, மலையக தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் வேண்டுகோள் இதுதான்.

(மாற்றம்)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................. (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................. (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ..................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ................................

ii)  ................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ...........................................................................

ii) old / How / you? /are : ........................................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

### கல்வி tv CHANNEL-1

**17.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**17.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 19 இல் உள்ளது கூட 21 இல் கிடைக்காது

## திருமலையில் கூறினார் சுமந்திரன்

திருமலை, மே. 31

**21 ஆம் திருத்தம், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை குறைக்கின்ற ஒரு சட்டமூலம் என மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தாலும்கூட, உண்மையிலேயே 19ஆம் திருத்தத்தில் இருந்ததைக்கூட அதில் அடைய முடியாத சூழ்நிலை இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**



திருகோணமலையில் வைத்து நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், 19ஆம் திருத்தத்தில், ஜனாதிபதிக்கு அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என்பதை சுட்டிக் காட்டினார்.

இந்த நிலையில், தற்போது நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டுள்ள 21ஆம் திருத்த வரைவில், ஜனாதிபதி எத்தனை அமைச்சுகளையும் தம் கீழ் வைத்திருக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அதேநேரம், அதிலே 13ஆம் திருத்தத்துடன் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறினார். (அ)

# நூலக திறப்பு விழாவும் உலமாக்கள் நினைவும்




அம்பாறை, மே. 31

கல்முனை சமூக மேம்பாட்டுக்கான பழைய மாணவர்கள் செயல்வலையமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் மௌலவி எஸ்.எம். நிம்ஸாத் மன்பயி தலைமையில் மௌலானா மௌலவி அஷ்ஷெய்யிது எஸ்.எம். மஸ்ஹூர் தங்கள் (அஸ்ஸகாபி அர்ரிபாயி) அவர்களினால் விஷேட துஆ பிராத்தனையுடனும், ஆசிர்வாதத்துடனும் நூலக திறப்பு விழாவும் மர்ஹூம்களான உலமாக்களை நினைவு கூரல் நிகழ்வும் கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலில் மிக சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூலகத்திற்குரிய கிதாபுகளை மௌலானா மௌலவி அஷ்ஷெய்யிது எஸ்.எம். மஸ்ஹூர் தங்கள் ( அஸ்ஸகாபி அர்ரிபாயி) அடுக்கி வைத்து ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து உலமாக்கல், நூல்கள் அன்பளிப்பாளர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களினால் நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டது.

அமைப்பின் தலைவரினால் அமைப்பின் வளர்ச்சி பற்றியும், எதிர்காலத் திட்டங்களை செயல்படுத்துவது பற்றியும் உரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் உலமாக்கள் புத்திஜீவுகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சாணக்கியன் எம்.பி. தெரிவித்த குற்றச்சாட்டை நிராகரிக்கிறேன்

## முன்னாள் அமைச்சர் தயா கமகே தெரிவிப்பு



அம்பாறை, மே. 31

மக்கள் வங்கியில் இருந்து கடன் பெற்றுக்கொண்டு மூன்று வருடமாக ஒரு சதமேனும் செலுத்தவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை நிராகரிப்பதாக ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தயா கமகே தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் அவரது காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் வங்கியில் இருந்து நான் அதிக பணம் கடன் பெற்றதாகவும் கடந்த வருடங்களாக ஒரு சதமேனும் செலுத்தவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சாட்டியிருந்தார்.

அவர் இந்த குற்றச்சாட்டை பாராளுமன்றத்திலும் தெரிவித்திருந்ததுடன் பின்னர் ஊடக சந்திப்பொன்றின்போதும் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத்தில் தெரிவித்த விடயத்துக்கு என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது. என்றாலும் ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கு எதிராக எனக்கு சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் இன்று கூட எனது தொழிற்சாலைகள் இயங்குகின்றன. கொரோனா காலத்திலும் சிரமங்களுக்கு மத்தியில் சிறப்பாக ஆடைத் தொழிற்சாலைகள் இயங்கின. தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் எனது நிறுவனத்தில் அதிகமாக வேலை செய்கின்றனர். சாணக்கியன் எம்.பி தெரிவித்திருப்பதுபோல் ஒரு சதமேனும் மக்கள் வங்கியில் இருந்து நான் கடன் பெற்றதில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

எனவே தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவிக்கு வந்ததுடன் நான் எடுத்ததாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர் கூறிய அந்த கடன் தொகையை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்திருக்கின்றார். இதனை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

நாங்கள் வியாபாரம் செய்கின்றவர்கள். ஆனால் இவ்வாறான கடனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனது கௌரவத்தை பாதிக்கும் வகையில் என் மீது பொய் குற்றச்சாட்டு சாணக்கியன் எம்.பி தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் சாணக்கியன் எம்.பிக்கு தனிப்பட்ட பிரச்னைகள் இருக்கலாம். அதற்காக என்னை இவ்வாறு அவர் கூற முடியாதல்லவா? இதற்காக உரிய நடவடிக்கை அவருக்கு எதிராக எடுக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதற்காக என்னை திருடர் என தெரிவித்து ரணில் விக்ரமசிங்கவுடன் இருப்பவர்கள் அனைவரும் திருடர்கள் என தெரிவிப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார். எனவே இந்த அபாண்டமான குற்றச்சாட்டை அவர் வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# "உயிரூட்டிய பாடசாலைக்கு உரமூட்டும் வேலை திட்டம்"



அம்பாறை, மே. 31

"உயிரூட்டிய பாடசாலைக்கு உரமூட்டும் வேலை திட்டத்தின் " கீழ் அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலய அஸ்- ஸுஹறா வித்தியாலயத்துக்கு முதலாம் கட்டமாக ஒரு தொகுதி பாடசாலைக்கு தேவையான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

"உயிரூட்டிய பாடசாலைக்கு உரமூட்டும் வேலை திட்டத்தின்" கீழ் முதலாம் கட்டமாக ஒரு தொகுதி புதிய கதிரைகள் மற்றும் மேசைகள் திருத்தியமைக்கப்பட்ட மாணவர்களுக்கான கதிரைகள், மேசைகள், ஆசிரியர்களுக்கான கதிரைகள், வைட் போர்ட் மற்றும் சுட்டிகாட்டி பெயர்ப் பலகை என்பன அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எச்.எஸ். ஆர். மஜீதியாவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு பாடசாலையின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் பிற்பகல் பாடசாலையில் இடம்பெற்றது.

இதன் போது பாடசாலை அபிவிருத்தி குழுவினரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் பங்களிப்பில் சுமார் 7 லட்சம் ரூபாய் செலவில் குறித்த வேலைத்திட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 76 கஜமுத்துக்களுடன் அம்பாறையில் அதிரடிப்படையினரால் ஒருவர் கைது



அம்பாறை, மே. 31

76 யானை கஜமுத்துக்களை தன்வசம் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலுஎல பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 67 வயதுடைய தேவாலஹிந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் முன்னாள் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்.

விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்ட கஜமுத்துக்களின் பெறுமதி சுமார் 65 இலட்சத்திற்கும் அதிகமாகும்.

சம்பவம் தொடர்பில் இங்கினியாகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நேபாள விமானம் விபத்து; 20 பேரின் சடலங்கள் மீட்பு

காத்மண்ட், மே 31
நேபாள விமான விபத்தில் பலியான 20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் வெளிநாட்டினர் உட்பட 22 பயணிகளுடன் ஞாயிற்றுக்கிழமை பறந்த சிறிய விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே காணாமல் போனது.

இந்த விமானம் முஸ்தாங் மாவட்டம் கோவாங் பகுதியில் விழுந்து நொறுங்கியது தேடுதலில் உறுதியானது.

விமானம் விழுந்து நொறுங்கிய பகுதியிலிருந்து 20 சடலங்களை மீட்டுள்ள இராணுவத்தினர், உடற்கூற்றாய்வுக்காக காத்மாண்ட்டுக்கு அனுப்பிவைத்துள்ளனர். மீதமுள்ளவர்களை தேடும் பணியில் இராணுவத்தினருடன் இணைந்து மீட்புப் படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.



# இந்தோனேஷிய படகு விபத்து; 31 பேர் மீட்பு; 11 பேர் மாயம்!



ஜகார்த்தா, மே 31
இந்தோனேஷியாவில் 42 பேருடன் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில், 31 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும், காணாமல் போன 11 பேரை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சுலாவசி மாகாணத்தின் தலைநகரான மகஸ்ஸரில் இருந்து சென்ற படகு எரிபொருள் தீர்ந்ததாலும், மோசமான வானிலை காரணமாகவும் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

கடலில் தத்தளித்த 31 பேர் மீட்கப்பட்ட நிலையில், மாயமான 11 பேரை தேடும் பணியில் இந்தோனேசியா விமானப் படை ஹெலிகொப்டர்களுடன் 2 மோட்டார் படகுகள் மற்றும் மீட்பு படகுகள் ஈடுபட்டுள்ளன.

மீட்கப்பட்டவர்கள் வீடு திரும்பியுள்ளனர். அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகுக்கு பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாத நிலையில், படகு ஓட்டியவர் மற்றும் உரிமையாளர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# குரங்கு அம்மை நோய் சமூக பரவலாக மாறும்!

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

ஜெனிவா, மே 31
**இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட 20 நாடுகளில் ஏறத்தாழ 200 பேருக்கு குரங்கு அம்மை பாதித்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.**

இந்த குரங்கு காய்ச்சலால் ஓரினச்சேர்க்கையாளர்கள், இரு பாலின சேர்க்கையாளர்கள்தான் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள் என இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உலக சுகாதார அமைப்பின், "உலக தொற்று அபாய தயார்நிலை" குழுவின் இயக்குநர் சில்வி பிரையன்ட் நேற்று தெரிவித்ததாவது,

"மக்கள் கவலைப்படும் அளவுக்கு குரங்கம்மை வேகமாக பரவும் நோயல்ல. ஆனால், மெதுவாக இது சமூக பரவலாக மாறக் கூடிய அபாயம் உள்ளது. இதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு விரைவான நடவடிக்கை தேவை. தடுப்பூசியும், முறையான சிகிச்சையும் இதற்கு ஒரே தீர்வு. பாதிக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து, தனிமைப்படுத்துவதே, இதன் பரவலை தடுப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாகும்.

எதிர்காலத்தில் இந்த குரங்கு காய்ச்சல் இன்னும் அதிக எண்ணிக்கையிலானவர்களை பாதிக்கும் என எதிர்பார்க்கிறோம்" என்று தெரிவித்தார். (ஐ)

# பிரேசில் வெள்ளம், நிலச்சரவு; பலி எண்ணிக்கை 79ஆக உயர்வு

பிரேசிலில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 79ஆக உயர்ந்துள்ளது.

பிரேசிலில் கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு வீதிகள் மோசமடைந்துள்ளன. ஆறுகளில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கரையோரத்தில் இருந்த மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். சுமார் 4,000 வீடுகள் சேதமடைந்துள்ளன. வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இதுவரை 79 பேர் இதுவரை பலியாகி உள்ளனர். காணமல் போனவர்கள் பற்றிய விவரம் இதுவரை தெரிய வில்லை. அவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது" என்று மீட்புக் குழு அதிகாரி தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் அடுத்த சில நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கனமழையை எதிர்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று பிரேசில் அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வெள்ளம் பாதித்த இடங்களை பார்வையிட்டார்.

பிரேசிலில் கடந்த மாத தொடக்கத்திலும் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். 2021 ஆம் ஆண்டில் பிரேசிலில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## "ஏதாவது செய்யுங்கள்"

# -துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தோரின் உறவுகள் பைடனிடம் கண்ணீர் கதறல்-

வாஷிங்டன், மே 31
அமெரிக்க பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்களை ஜனாதிபதி ஜோ பைடன் சந்தித்தார்.


இதன்போது, அவர்கள் ஜனாதிபதி பைடனைப் பார்த்து, "ஏதாவது செய்யுங்கள்" என அவரை நோக்கி கண்ணீர் மல்க கதறி வேண்டுகோள் விடுத்தனர்.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் யுவால்டி நகரிலுள்ள ராப் ஆரம்பப்பாடசாலையில் கடந்த வாரம் துப்பாக்கியுடன் நுழைந்த 18 வயது இளைஞன் பாடசாலை சிறுவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினான். இந்த கொடூர இந்த துப்பாக்கிச்சூட்டில் 19 பாடசாலை சிறுவர்கள், 2 ஆசிரியைகள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய சல்வடொர் ரமொஸ் என்ற இளைஞனை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் டெக்சாஸ் பாடசாலை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக யுவால்டி நகரில் உள்ள ராப் ஆரம்பப்பாடசாலை நேற்று சென்றார்.

பாடசாலை வளாகத்திற்கு வெளியே தற்காலிகமாக அமைந்துள்ள நினைவிடத்தில் அவர் சில



நிமிடங்கள் அமைதியாக நின்று அஞ்சலி செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்த ஜோ பைடன், அவர்களுடன் அங்குள்ள தேவாலயத்தில் பிரார்த்தனை செய்தார்.

அவர் தேவாலயத்தில் இருந்து வெளியே வரும் போது அந்த தெருவில் நின்று இருந்த பொதுமக்கள் "ஏதாவது செய்யுங்கள்" என அவரை நோக்கி கண்ணீர் மல்க கதறி வேண்டுகோள் விடுத்தனர். அதற்கு பதில் அளிக்கும் விதமாக அதிபர் பைடன் "நிச்சயமாக , நிச்சயமாக" என தெரிவித்தார்.

# ஜேர்மனி, பிரான்ஸ் ஆயுதங்களை உக்ரைனுக்கு அனுப்பக்கூடாது!

## ரஷ்ய ஜனாதிபதி எச்சரிக்கை

மொஸ்கோ, மே 31
உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்பக்கூடாது என்று ஜேர்மனி, பிரான்ஸ்க்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜேர்மனி பிரதமர் ஒலாப் ஷோல்ஸ், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரானுடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேச்சு நடத்தினார்.

இதுதொடர்பாக ரஷ்ய அதிபர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில்,

"ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்பக்கூடாது என்று எச்சரிக்கிறோம். இதனால் நிலைமை மோசமாகும். மனிதாபிமான பிரச்னைகள் அதிகரிக்கும். ரஷ்யாமீது விதிக்கப்பட்ட பொருளாதார தடை காரணமாகவே சர்வதேச அளவில் உணவு தானியங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

தடைகளை நீக்கினால் ரஷ்யாவில் இருந்து உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்கிறோம். உக்ரைனில் இருந்து கருங்கடல் வழியாக உணவு தானியங்களை அனுப்பவும் அனுமதிப்போம் - என்றுள்ளது. (ஐ)

## ஐ. பி. எல். இருபது - 20 தொடர்:

# அறிமுக தொடரிலேயே சம்பியனானது குஜராத்!




அஹமதாபாத், மே 31

ஐ. பி. எல். 15ஆவது தொடரில் அறிமுக அணியான குஜராத் ரைட்டன்ஸ் சம்பியன் பட்டத்தை சுவீகரித்து வரலாறு படைத்தது.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நேரடி பார்வையாளர்களை கொண்ட அஹமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நிறைவடைந்த இறுதியாட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸை 7 விக்கெட்களால் மிக இலகுவாக வெற்றி கொண்டது குஜராத் அணி. அத்துடன், இலங்கை மதிப்பில் 91 கோடி ரூபாய் பணப்பரிசையும் அந்த அணி பெற்றுக் கொண்டது. இரண்டாம் இடத்தைப் பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு 59 கோடி ரூபாய் பணப்பரிசு கிடைத்தது.

ஐ. பி. எல். அறிமுகப் போட்டியில் சம்பியனான (2008) ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 14 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக ஐ. பி. எல். இறுதி ஆட்டத்தில் பங்கேற்றது. முதலில் ஆடிய அந்த அணி குஜராத் அணிக்கு வெற்றி இலக்காக 131 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய குஜராத் ரைட்டன்ஸ் 18.1 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யாவின் சகலதுறை ஆட்டம், ஷப்மன் கில், டேவிட் மில்லர் ஆகியோரின் துடுப்பாட்டங்கள் என்பன இந்தப் போட்டியில் குஜராத் வெற்றி பெற உதவின. மேலும், இந்த வருட ஐ. பி. எல். போட்டியில் 3ஆவது தடவையாக ராஜஸ்தான் றோயல்ஸை குஜராத் ரைட்டன்ஸ் வெற்றி கொண்டது.

ஆரம்ப வீரர் விரித்திமன் சஹா (5) 2ஆவது ஓவரில் ஆட்டமிழந்ததும் குஜராத் சிறிது தடுமாறியது. மொத்த எண்ணிக்கை 23 ஓட்டங்களாக இருந்த போது 5 ஆவது ஓவரில் அதிரடி ஆட்டக்காரர் மத்தியூ வேட் (8) வெளியேறினார்.

எனினும் ஷப்மன் கில், ஹார்திக் பாண்ட்யா (34) ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 63 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

ஹார்திக் பாண்ட்யா ஆட்டமிழந்த பின்னர் ஷப்மன் கில்லும் டேவிட் மில்லரும் வீழ்த்தப்படாத 4ஆவது விக்கெட்டில் 47 ஓட்டங்களைப் பகிர்ந்து குஜாரத் ரைட்டன்ஸ் சம்பியனாவதை உறுதி செய்தனர்.

ஷப்மன் கில் 45 ஓட்டங்களுடனும் டேவிட் மில்லர் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். முன்னதாக, இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த ராஜஸ்தான் றோயல்ஸ் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 130 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ராஜஸ்தான் றோயல்ஸ் துடுப்பாட்டத்தில் எவரும் கணிசமான ஓட்டங்கள் பெறாதது அணியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இந்தமுறை ஐ. பி. எல். தொடரில் துடுப்பாட்டத்தில் அபார ஆற்றலை வெளிப்படுத்தி அதிகூடிய 863 மொத்த ஓட்டங்களைக் குவித்த ஜோஸ் பட்லர், இன்றைய போட்டியில் 39 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டமிழந்தார்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால் (22), ஜோஸ் பட்லர் ஆகிய இருவரும் ஆரம்ப விக்கெட்டில் பகிர்ந்த 31 ஓட்டங்களே ராஜஸ்தான் றோயல்ஸ் இனிங்ஸில் அதிசிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது.

யஷஸ்வி ஜெய்ஸ்வால் முதலாவதாக ஆட்டமிழந்த பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்கள் சரிய ஐ. பி. எல். இறுதிப் போட்டி வரலாற்றில் ராஜஸ்தான் றோயல்ஸ் 2ஆவது மிகக்குறைந்த மொத்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

அவர்கள் இருவரைவிட சஞ்சு சாம்சன் (14), பின்வரிசையில் ரியான் பரக் (15), ஷிம்ரன் ஹெட்மயர் (11), ட்ரென்ட் போல்ட் (11) ஆகியோர் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்ற போதிலும் அவர்கள் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை.

குஜராத் ரைட்டன்ஸ் பந்துவீச்சில் ஹார்திக் பாண்ட்யா 4 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரவி ஸ்ரீனிவாசன் சாய் கிஷோர் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

**கின்னஸ் சாதனை**

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கும் குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கும் இடையிலான இறுதிப் போட்டிக்கு முன்பதாக கண்கவர் முடிவுவிழா வைபவம் நடைபெற்றது. இதன்போது மிகவும் நீளமான வெள்ளை நிற ரீசேர்ட் ஒன்றை உருவாக்கி காட்சிப்படுத்தி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கின்னஸ் சாதனை ஒன்றை நிலைநாட்டியது. ஐ. பி. எல்லில் 15 வருடங்கள் என்ற வாக்கியமும் 10 அணிகளின் சின்னங்களும் 66 மீற்றர் நீளத்தையும் 42 மீற்றர் அகலத்தையும் கொண்ட ரீ சேர்ட்டில் பொறிக்கப்பட்டிருந்தது.

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ்:

# நடால் - ஜொகோவிச் இன்று பலப்பரீட்சை!



பாரிஸ், மே 31

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் இன்று செவ்வாய்க்கிழமை காலிறுதி போட்டியில் நடப்பு சம்பியன் ஜொகோவிச் உடன் ரபேல் நடால் விளையாடுகிறார். இருவரும் நேருக்கு நேர் பலப்பரீட்சை மேற்கொள்ளவுள்ள 59ஆவது போட்டி இது.

நடப்பு பிரெஞ்சு ஓப்பன் தொடர் கடந்த 22ஆம் திகதி தொடங்கியது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரென்னிஸ் விளையாட்டு உலகின் முன்னணி வீரர்களும் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

கிராண்ட்ஸ்லம் பட்டங்களுக்கான தொடர்களில் இதுவும் ஒன்று. இருவரும் கடந்த ஆண்டு நடைபெற்ற பிரெஞ்சு ஓப்பன் காலிறுதி போட்டியில் விளையாடி இருந்தனர். அதில், ஜொகோவிச் வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நடால், இதற்கு முன்னர் 13 முறை பிரெஞ்சு ஓப்பன் பட்டத்தை வென்றவர்.

இதற்கு முன்னர் இருவரும் நேருக்கு நேர் மோதிய போட்டிகளில் ஜொகோவிச் 30 முறையும், நடால் 28 முறையும் வென்றுள்ளனர். பிரெஞ்சு ஓப்பன் தொடங்குவதற்கு முன்னர் களத்தில் தனக்கு கடுமையான சவால் கொடுக்கும் போட்டியாளர்களில் நடால் முதல் வரிசையில் இருப்பவர் என ஜொகோவிச் சொல்லியிருந்தார்.பிரெஞ்சு ஓப்பன் பட்டத்தை ஜொகோவிச் இரண்டு முறை மட்டுமே வென்றுள்ளார். நடால், ஜனவரியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் ஒற்றையர் பிரிவில் பட்டத்தை வென்றிருந்தார். அத்துடன், தொடர்ச்சியாக 13ஆவது முறையாக காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார் நடால். (ஐ)

# ஐ. பி. எல். இருபது - 20 தொடர்; சிறந்த வீரர்களுக்கான விருது



அஹமதாபாத், மே 31

கடந்த 2 மாதங்களாக கோலாகலமாக நடந்து வந்த ஐ. பி. எல். தொடரின் இறுதி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் குஜராத் அணி சம்பியனானது.

இந்தத் தொடரில் சிறப்பாக செயல்பட்ட வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதன்படி, 15ஆவது தொடரில் அதிக ஓட்டங்கள் அடித்தவர்களுக்கான ஒரேஞ் நிற தொப்பியை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர் ஜோஸ் பட்லர் தட்டி சென்றார். இந்தத் தொடரில் ஒட்டு மொத்தமாக அவர் 863 ஓட்டங்களை அவர் குவித்திருந்தார்.

அதிக விக்கெட் வீழ்த்தியவர்களுக்கான ஊதா நிற தொப்பியை ராஜஸ்தான் அணியின் சுழல்பந்து வீச்சாளர் யஸ்வேந்திர சஹால் பெற்றார். 17 போட்டிகளில் அவர் 27 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இந்த தொடரின் சிறந்த மதிப்புமிக்க வீரர் விருதும் பட்லருக்கு வழங்கப்பட்டது. கொல்கத்தா அணிக்கு எதிராக லக்னோ வீரர் ஏவின் லெவிஸின் பிடியெடுப்பு சிறந்த பிடியெடுப்பாக அங்கீகரிக்கப்பட்டது.

போட்டியில் ஒழுக்கத்துடன் விளையாடிய அணிக்கான விருதை ராஜஸ்தான் மற்றும் குஜராத் அணிகள் பகிர்ந்து கொண்டன. இந்த தொடரின் சிறந்த சராசரியை பெற்ற வீரருக்கான விருது பெங்களூரின் தினேஷ் கார்த்திக்குக்கு வழங்கப்பட்டது.

வளர்ந்து வரும் இளம் வீரருக்கான விருது ஐதராபாத் வேகம் உம்ரான் மாலிக்குக்கு வழங்கப்பட்டது.

# நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்கவேண்டாம்!

## மகாநாயக்கர்கள் கூட்டாக ஆலோசனை

கொழும்பு, மே 31

**ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்கும் திருத்தச்சட்டங்கள் நிறைவேற்றப்படக்கூடாது என்று மகாநாயக்கர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.**

நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நேற்று முன்தினம் கண்டியில் அஸ்கிரி - மல்வத்து மகாநாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டபோது இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முப்படைகளின் பிரதானியாக ஜனாதிபதி தொடர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் 13ஆவது திருத்தச் சட்டம் இந்நாட்டுக்கு மிகவும் ஆபத்தானது. அதைத் தடுப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தால் மாத்திரமே சாத்தியப்படும்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கக்கூடாது

சுயாதீன ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக செயற்பட வேண்டும். அதற்காக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதே போன்று தற்போதைக்கு பொருளாதாரப் பிரச்னைக்கு தீர்வு காண்பதே முக்கியமானது.

அதற்குப் பதிலாக அரசியலமைப்புத் திருத்தம் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளித்தால் பொருளாதார நெருக்கடி மீண்டும் அதிகரித்து விடும் என்றும் மகாநாயக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)



# நீதி கிடைக்கும் வரை நாம் போராடுவோம்

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள்

வவுனியா, மே 31

எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்போம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி 13 வருடங்களாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியை எந்த அரசாங்கமும் வழங்கவில்லை. அரசு மீது நம்பிக்கை இழந்த நாம் சர்வதேசத்திடம் எமக்கான நீதியை வேண்டி தொடர்ச்சியாக போராடிவருகின்றோம். எமது உறவுகளைதருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம்.நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

எனவே எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்த போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம். எமது பிரச்னையை தீர்ப்பதற்கு இனி யாவது சர்வதேசம் முன்வர வேண்டும்-என்றனர். (அ)

# கட்டணம் செலுத்த தவறிய இலங்கை மின்சார சபை!

கொழும்பு, மே 31

தனியார் துறை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலையங்களில் இருந்து எட்டு மாதங்களாக பெறப்பட்ட மின்சாரத்திற்காக செலுத்த வேண்டிய 23 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபை செலுத்த தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மின்சார சபை தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கான கட்டணத்தை செலுத்த தவறியதன் காரணமாக சிறிய மின் உற்பத்தி நிலையங்கள், சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் காற்றாலைகள் மூடப்படுவதாக உள்ளூர் எரிசக்தி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் கடனை செலுத்தத் தவறியமையினால் தனியார் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் சுமார் 7000 ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் உள்ளூர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ருவன் பிரசங்க தெரிவித்தார். (அ)

# ஏ.எல். பெறுபேறு ஜூலையில்!

கொழும்பு, மே 31

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஜூலை மாதம் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பிரயோக பரீட்சைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் இதற்காக கம்பிகள், ஆளிகள் மற்றும் மின்குமிழ்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய பெருந்தொகை பணத்தைச் செலவிட நேரிட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நாட்களில் நடத்தப்பட்டு வரும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பரீட்சையில் ஒருவருக்கு பதிலாக மற்றுமொருவர் பரீட்சையில் தோற்றிய சம்பவமொன்று பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார். மேலும், எதிர்வரும் ஒக்ரோ பர் மாதம் 15ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சையும், 16ஆம் திகதி முதல் உயர்தரப் பரீட் சையையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார். (அ)

# சீனியின் விலை உச்சம்

கொழும்பு, மே 31

சீனியின் விலை கடந்த வாரத்திலும் பார்க்க 20 ரூபா முதல் 30 ரூபா வரை அதிகரித்துள்ளது.

இதற்கமைய, மொத்த விற்பனை விலை அதிகரிப்பின் காரணமாக சீனிக்கு தற்போது சில்லறை விலையில் 30 ரூபா வரை அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இதன் பிரகாரம் ஒரு கிலோ சீனியின் விலை 320 ரூபா வாகும்.

சதொச நிறுவனமும் சீனியின் விலையை 7 ரூபாவினால் அதிகரித்துள்ளபோதும், அதன் விற்பனை விலையான 170 ரூபா விலை தற்போது 177 ரூபாவாக மட்டுமே கூடியுள்ளது.

எனினும் குறித்த விலையில் சதொசவின் எந்தவொரு கிளையிலும் சீனி விற்பனைக்கு கிடைப்பதில்லை என்று நுகர்வோர் பலரும் முறைப்பட்டுள்ளனர்.

அதே நேரம் சீனியின் விலை அதிகரிப்பு காரணமாக தேநீர் உள்ளிட்ட பானங்களின் விலைகளும் உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அத்தியாவசியமற்ற செயல்திட்டங்கள் உடனடியாக நிறுத்தப்படுதல் அவசியம்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து

கொழும்பு, மே 31

நாட்டில் முன்னெடுக்கப்படும் அனைத்து அத்தியாவசியமற்ற செயற்திட்டங்களும் நிறுத்தப்பட்டு, அதற்கென செலவிடப்படும் பணத்தை குறுகிய காலத்தில் சமூக பாதுகாப்புக்காக பயன்படுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. வறுமையில் இருந்து விடுபடாமல் வாழ முடியுமா என்பதுதான் முக்கியம் என அவர் தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# இலங்கை பொலிஸாரின் பயிற்சியை மீளாய்வு செய்கின்றது பிரித்தானியா!

கொழும்பு, மே 31

இலங்கை பொலிஸாருக்கு பிரித்தானியா வழங்கிய ஆதரவின் தாக்கத்தை ஆராயவும், கற்றுக்கொண்ட பாடங்களை அடையாளம் காணவும் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்கவும், கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் அண்மையில் மீளாய்வு ஒன்றை ஆரம்பித்துள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான தற்போதைய திட்ட ஒப்பந்தம் மற்றும் கடந்த 31 மார்ச் 2022 முடிவடைந்துள்ளது.

இந்த நிலையிலேயே கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம், எதிர்கால மோதல், ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு நிதி திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனை பிரித்தானிய பாராளுமன்ற துணை செயலாளர், விக்கி போர்ட் எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளார். இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகளை தமது அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் கூறினார்.

அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெற்காசிய அமைச்சர், விம்பிள்டனின் பிரபு (தாரிக்) அகமது வலியுறுத்தியுள்ளார்.

தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் பொறுப்புக் கூறப்படவேண்டும் மற்றும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் பொலிஸ் படையுடனான தமது பயிற்சி ஒப்பந்தம், 2022 மார்ச் மாதம் முடிவடைந்த நிலையில், மனித உரிமைகள் தொடர்பான கவலைகள் காரணமாக, அதனை நீடிக்கப் போவதில்லை என்று இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகத்துக்கு பொலிஸ் ஸ்கொட்லாந்து கடந்த நவம்பரில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# வவுனியாவில் திடீரென தீ பிடித்து எரிந்த ஓட்டோ!

வவுனியா, மே 31

வவுனியா ரயில் நிலைய வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று நேற்று திடீர் என தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதனையடுத்து அங்கிருந்தவர்களால் தீ உடனடியாக அணைக்கப்பட்ட நிலையில் பாரிய அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டிருந்தது.

குறித்த தீ விபத்து காரணமாக ஓட்டோ பகுதியளவில் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இராணுவ....

பகுதி வருமாறு:

இலங்கை இராணுவம் தனது முதல் தர அதிகாரிகளுக்கு சாரதி ஒருவர் மற்றும் உதவியாளருடன் கார் வசதியை வழங்குகின்றது.

இராணுவத்தில் பின்பற்றப்படும் முறைமையின் படி, லெப்டினன்ட் கேணல் பதவிக்கு பதவி உயர்வு பெறும் அதிகாரிகள் முதல் தரத்திற்கு உயர்த்தப்படுவதுடன், அதற்குக் கீழுள்ள பல மூத்த அதிகாரிகளும் முதல் தரத்திற்கு தகுதியுடையவர்கள். இந்த வசதியை வான்படை மற்றும் கடற்படையினர் பின்பற்றுகிறார்கள். இது தவறா இல்லையா என்று நாங்கள் கூற வரவில்லை.

ஆனால், நாம் கூறப்போவது, வான்படை மற்றும் கடற்படையில் இல்லாத வகையில் இராணுவத்தில் இந்த நிலையில் உள்ள அதிகாரிகள் இந்த வசதியை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

பெரும்பாலான முதல்தர அதிகாரிகள், காருடன் இணைக்கப்பட்ட சாரதி மற்றும் துணை வசதிகளுடன் கூடிய வாகனத்தை இராணுவ கடேற் அதிகாரிகள் பயன்படுத்துவதால் தவறான பயன்பாடு ஏற்படுகிறது.

கூடுதல் வாகனம் பெரும்பாலும் ரெஜிமென்ட் அல்லது இராணுவத் தலைமையகத்திலிருந்து வழங்கப்படுகின்றது. இதற்கு சாரதி ஒருவரும் மற்றும் உதவியாளரும் உள்ளனர். இது கடந்த கால போரினால் ஏற்பட்டுள்ள நிலைமையாகும். அந்த அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட காரின் கடமைகள் இராணுவத்தில் "பாடசாலை சேவைகள்" மற்றும் "அம்மணிக்கான சந்தை சேவைகள்" என்று நகைச்சுவையாக குறிப்பிடப்படுகின்றன.

அதாவது, அந்த அதிகாரிகளின் பாடசாலைக்கு செல்லும் குழந்தைகள் மற்றும் மனைவிகளின் செயற்பாடுகளுக்கு கார்கள் பயன்படுத்தப்படும். அதன்படி, சாரதியும், உதவியாளரும் அதிகாரியின் குடும்பத்தினரின் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதிகாரி கொடுத்த கார் தொலைந்து போய்விட்டால் அது பிரச்னை இல்லை. ஏனெனில், அவர் மற்றொரு சாரதி மற்றும் உதவியாளருடன் இராணுவ கடேற் ஜீப் அல்லது வாகனத்தை பயன்படுத்துவார்.

இந்த காருக்கு மாதாந்தம் சுமார் 100,000 ரூபாய் செலுத்துகின்றனர். கூடுதலாக, இந்த கார் ஒரு காலாண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு 610 லீற்றர் எரிபொருளை எடுக்கின்றது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இராணுவத் தளபதி முதல் லெப்டினன்ட் கேணல் வரை இராணுவத்தின் மூத்தோர் பட்டியலில் 1,108 அதிகாரிகள் இருந்தனர்.

தளபதிக்கு மேலதிகமாக 56 மேஜர் ஜெனரல்கள், 181 பிரிகேடியர்கள், 37 தற்காலிக பிரிகேடியர்கள், 98 கேணல்கள், 149 தற்காலிக கேணல்கள், 522 லெப்டினன்ட் கேணல்கள் மற்றும் 64 லெப்டினன்ட் கேணல்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் இராணுவ முதல் தரத்தின் மூத்த தர வரிசையில் இருந்தவர்கள். கூடுதலாக, மற்ற மூத்த மேஜர்களின் குழுவும் அவர்களில் அடங்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள அதிகாரிகளின் பதவி உயர்வுகளை மறந்து விடுங்கள். சில அதிகாரிகள் ஓய்வு பெற வாய்ப்பு உள்ளது மற்றும் முதல் தர அதிகாரிகள் முதல் கீழ் வரையிலான லெப்டினன்ட் கேணல்கள் கணக்கீட்டின் வசதிக்காக ஆண்டுக்கு 2,703,520 லீற்றர் எரிபொருள் (தனிப்பட்ட பயன்பாட்டிற்கு). இது சுமார் 1,946 மெற்றிக் தொன் பெற்றோல் ஆகும்.

நாட்டின் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு, அரச பணியாளர்களுக்கு மே மாதம் சம்பளம் வழங்க பணம் அச்சிட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ள நிலையில், மாதம் ஒரு கார் வாடகைக்கு ஆண்டுக்கு 1,330 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதலாக, இந்த தனியார் பயன்படுத்தப்படும் கார்களுக்கான சாரதி மற்றும் உதவியாளர் சம்பளத்தை நாம் கணக்கிட வேண்டும்.

சராசரியாக இவர்களில் ஒருவர் சீருடை கொடுப்பனவுகள் இன்றி சுமார் 75,000 ரூபாவைப் பெறுவதாகவும், அதன்படி இரண்டு கொடுப்பனவுகளின் தொகை ரூபா 150,000 எனவும் தெரிவிக்கப்படுகிறது. அந்த சாரதிகள் மற்றும் உதவியாளர்களின் சம்பளத்திற்கான வருடாந்த செலவு 1,994 மில்லியன் ரூபாவாகும்.

இராணுவத்தில் முதலாம் தர அதிகாரிகளின் முறைகேடுகளால் வீணடிக்கப்பட்டுள்ள பணத்தின் அளவு 4,459 மில்லியன் ரூபாவாகும்.

அதன் ஒரு துஷ்பிரயோகத்திற்காக நாம் செய்தது இந்த நாட்டுக்கு தாங்க முடியாத அளவிலான இராணுவத்தை பேணுவதுதான். எரிபொருள் பிரச்னைக்குத் தீர்வாகவும் நாட்டின் நிதிப் பிரச்னைக்குத் தீர்வாகவும் தேவைப்பட்டால் அரச தலைவரும் இராணுவத் தளபதியும் மேற்படி விடயத்தில் நடவடிக்கை எடுத்து நாட்டுக்கு முன்னுதாரணமாக இருக்க முடியும்.

ஏனெனில், நாட்டின் பொதுச் சேவை மற்றும் அரை பொதுச் சேவையில் தாங்க முடியாத அதிகரிப்பு தொடர்பாக உரையாடும் போது, நாம் தாங்க முடியாத இராணுவத்தைப் பற்றி பேச வரவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## ஆயிஷாவை....

படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சிறுமி கொலை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில், 29 வயதான குடும்பஸ்தர் சிறுமியை தானே கொன்றதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

எனினும், சிறுமி கொலைக்கான காரணம் குறித்து தெரியவரவில்லை. இந்நிலையில், சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## காணாமல்...

ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் போலியானது", "சர்வதேசம் எமக்கு தீர்வு பெற்றுத் தர வேண்டும்" என்ற கோரிக்கைகளை அவர்கள் எழுப்பினர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 200இற்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதேசமயம், கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்க அலுவலகத்துக்கு முன்பாகவும், வவுனியாவில், பழைய பேருந்து நிலையம் முன்பாகவும் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன.

## பயங்கர...

கனடாவிலிருந்து வெளியாகும் 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகைக்கு அவர் கருத்தளித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், இந்த வருடம் தேர்தல் பிரகடனத்தில், மாகாண சபைத் தேர்தல் மற்றும் கூட்டாட்சி தேர்தலில் வெற்றி பெற்று தான் பிரதமராக வரும் பட்சத்தில், மே மாதம் 2009 ஆம் ஆண்டு நடந்த தமிழர் இன அழிப்பு நடவடிக்கையின்போது கனடா அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் போனதற்கு அரசாங்கம் சார்பாக மன்னிப்பு கேட்பதுடன், தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிருந்து நீக்கவுள்ளதாகவும் உறுதியளித்திருந்தார்.

பற்றிக் பிரவுண் கனடா தமிழர்களிடையே நன்கு பிரபலமான இளம் அரசியல்வாதியாவார். இவர் தமிழர்களுக்கு ஆதரவாகத் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உணவுப் பாதுகாப்பில் கூட்டு வேலைத் திட்டம்

## ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு



கொழும்பு, மே 31

உணவுப் பாதுகாப்பு தொடர்பான விரிவான அரச மற்றும் தனியார் கூட்டு வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

பல நாடுகளுடனான கலந்துரையாடல்கள் உரத் தேவையை பூர்த்தி செய்வதில் வெற்றியடைந்துள்ள நிலையில், உரத் தட்டுப்பாடு அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவும் சிறுபோக பயிர்ச்செய்கையை கைவிட வேண்டாம் என ஜனாதிபதி, அனைத்து விவசாயிகளையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறுபோகத்தில் அறுவடை நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உணவுத் தட்டுப்பாட்டை குறைப்பது தொடர்பில் நேற்று கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உர இறக்குமதி, விநியோகம், உரிய முகாமைத்துவம், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் விவசாயிகளையும் அதிகாரிகளையும் ஒருங்கிணைத்தல் என்பனவற்றை உள்ளடக்கி தேசிய உரக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். விவசாயிகளின் விருப்பத்துக்கு ஏற்ப, இரசாயன அல்லது இயற்கை உரத்தைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விவசாய அமைச்சின் முழு ஈடுபாடும் வழங்கப்பட வேண்டுமெனவும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துடன், சிறுபோகப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படாத விளைநிலங்களை இனங்கண்டு அவற்றில் விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டக்கூடிய வகையில் பயறு, கௌப்பி மற்றும் சோயா போன்ற அத்தியாவசிய பயிர்களைப் பயிரிடுவது குறித்து இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

விவசாயம், கால்நடைகள் மற்றும் நன்னீர் மீன்பிடி உள்ளிட்ட தொழில் துறைகளுக்காக மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வரையறையின்றி வழங்குவதற்கும் இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## பிள்ளையானை....

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தனை கைது செய்து விசாரிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத் தங்கள் வழங்கப்படுகின்றன என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், முக்கிஸ்தர்களின் படுகொலை வழக்குகள் குறித்த விசாரணைகளுக்கு தேவையான ஆதாரங்கள், சாட்சியங்களும் திரட்டப்பட்டு வருகின்றன. இணைய வழியாகவும் சாட்சிகளிடம் வாக்குமூலங்கள் பெறப் பட்டுள்ளன என்றும் அறியவருகின்றது.

அத்துடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் செய்தனர் என்று கூறப்படும் படுகொலைகள், ஆள் கடத்தல்கள், பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் தொடர்பிலும் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், இவை தொடர்பில் வலுவான ஆதாரங்களும் வழங்கப்பட்டுள்ளன என்றும் அறிய வருகின்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை குற்றச்சாட்டில் கைதான சந்திரகாந்தன் எம். பி. கடந்த 2015 ஒக்ரோபர் 11ஆம் திகதி கைது செய்யப்பட்டார். சிறையில் இருந்தவாறே கடந்த பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து வழக்குகளிலிருந்து கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், ஊடகவியலாளர் ஐ. நடேசன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள்மீது மீண்டும் விரைவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## இலங்கைக்கு....

வழங்கவுள்ளதாக வெளியான சியோ கண்டாவை மேற்கோளிட்டு வெளியான தகவல்கள் துல்லியமானவை அல்ல. நாங்கள் இலங்கை மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளோம் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இன்று....

50 ஆயிரம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மக்கள், 12.5 கிலோ, 5 கிலோ, 2.5 கிலோ சிலிண்டர்களை இன்று முதல் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

(ஐ)

## பொருளாதார....

தலைவர் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் வெதுப்பக பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நீண்ட வரிசையில் காத்து நிற்கும் நிலை ஏற்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

## யாழ்...

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் பொருளாதார நெருக்கடி காரணமாக மூடப்படவுள்ளது என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## போக்குவரத்து....

இடிகடுதெனிய பிரதேசத்தை சேர்ந்த தமித் பிரியதர்ஷன மணல தெரிவித்தார்.

அவர் தனது மனைவி இசங்கா மதுஷானியை மரம்பாவில் உள்ள விழா மண்டபத்தில் திருமணம் செய்து கொண்டார் என்று சிங்கள நாளேட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# அம்பாறை சிறுவர் இல்லத்தில் 16 வயதுடைய சிறுமி மாயம்!

அம்பாறை, மே. 31

அம்பாறை - கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் காணாமல்போன சிறுமியை கண்டுபிடிப்பதற்காக கல்முனை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவ தினமான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியிலிருந்து குறித்த சிறுமி மாயமானரென பாடசாலை நிர்வாகம் பொலிஸில் தெரிவித்துள்ளது. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருந்த சிறுமி பலரால் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் பாடசாலையில் பாதுகாப்புக்காக நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தங்கவைக்கப்பட்டிருந்தார் என்று அறியவருகிறது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 - 04 - 1940
மறைவு 26 - 05 - 2022

### சண்முகம் பாலசிங்கம்

யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், காரைநகர் பலகாட்டை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Louvres, லண்டன் Dunstable ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் பாலசிங்கம் கடந்த 26-05-2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சண்முகம் - அரசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,ராஜலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும்,மனோகரி(லண்டன்), வாசுகி(சுவிஸ்), சதீஷ் குமார்(பரிஸ்), கணேஷ்குமார் (சூட்டி - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்பிரகாசம், திரவியபவான், அருட்செல்வி, பிரியதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு, தவமணி, இராஜலிங்கம் மற்றும் பத்மநாதன், சாவித்திரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மதுரா, மிதுனன், தசாங்கன், விஷ்ணுகா, சஜீபன், சகானா, நிரோசன், கிருஷன், விபூஷன், எமா, எவான், எல்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

கிரியை :
Tuesday, 31 May 2022 12:00 PM
ASIAN FUNERAL SERVICE 35, Kenton Park Parade, Kenton Rd, Harrow HA3 8DN, United Kingdom

தகனம் :
Tuesday, 31 May 2022 4:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு :
**அருட்பிரகாசம் மனோகரி - மகள்**
**Mobile : +447402240904**
**திரவியபவான் வாசுகி - மகள்**
**Mobile : +41782442691**
**சதீஷ்குமார் - மகன்**
**Mobile : +33760562440**
**கணேஷ்குமார்(சூட்டி) - மகன்**
**Mobile : +447939539022**

# கடலில் வீழ்ந்து மீனவர் மாயம்!

வாழைச்சேனை,மே 31

வாழைச்சேனை இறங்குதுறையிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர் படகிலிருந்து கடலில் தவறி வீழ்ந்து காணாமல் போயுள்ளார் என்று அறியவருகின்றது.

வாழைச்சேனை - செம்மண் ஓடையை சேர்ந்த எம். சஹாப்தீன் (வயது 36) என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார். காணாமல்போன நபர் கடந்த சனிக்கிழமை இரு சக மீனவர்களுடன் ஆழ் கடல் மீன்பிடி நடவடிக்கைக்காக சென் றுள்ளார். இதன்போதே, அவர் படகிலிருந்து தவறிவீழ்ந்து காணாமல்போனார் என்று தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 - 04 - 1961
மறைவு 21 - 05 - 2022

### குமரதாஸ் செல்லையா

(குமரன்)

யாழ். சிறுபிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் Wembley ஐ வதிவிடமாகவும், பிரித்தானியா Milton Keynes வசிப்பிடமாகவும் கொண்ட குமரதாஸ் செல்லையா அவர்கள் 21.05.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற செல்லையா(ஓய்வுபெற்ற கணக்காளர் - Food Department, Colombo), ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சிவசிதம்பரம், நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,நாகபூசணி(மனோ) அவர்களின் அன்புக் கணவரும்,சாமுவேல் அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலேந்திரா(இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்- கனடா), தேவேந்திரா (இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துசபை), ரவீந்திரன் (Free Lanka Trading Company Limited- Colombo), இளங்கோ(ஜேர்மனி), சந்திரகுமார்(நோர்வே), ரேவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நகீரதன் (Former Major of Brent), யோகராணி, பவானி, சுசிலா, நகுலேஸ்வரி, நளாயினி, தவமணி, காலஞ்சென்ற லோகநாதன், யோகேஸ்வரி, சத்தியநாதன், பத்மநாதன், காலஞ்சென்ற கமலநாதன், கமலநாயகி, தவகலா, பத்மாவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்,சிவபாதம், நடராஜா, யோகரத்தினம், சிவகங்காதேவி, கலாநிதி, புவனேஸ்வரி, சிவசேகரம், புவனேஸ்வரன், சங்கரப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகலனும்,சௌமியா, ஷாலினி, நவநீதன், பிரவின், தினேஷயா, சுகந்தி, ஜெயா, சிவா, சாந்தி, சுதன், தயா, ரூபன், கஜந்தன், சுகிர், வனோஜன், கங்கா, ஜீவனா, ஜினோ, துசி, கீர்த்தனா, சகானா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும்,ரேஸான், தயா, பரன், சுரேகா, சசி, ஷோபி, சிந்து, தாரு, மது, பவித்ரா, சுஜித்ரா, சரண்யா ஆகியோரின் பாசமிகு மாமாவும்,வந்தனா, சாருகா, தர்ஷா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நகீரதன் - மைத்துனர்.**

தொடர்புகளுக்கு:
**மனோ - மனைவி** Mobile : +447926059747
**ரேவதி - சகோதரி** Mobile : +447570330924
**நகீரதன் - மைத்துனர்** Mobile : +447956274856
**சுதன் - பெறாமகன்** Mobile : +447719466843
**கஜந்தன் - பெறாமகன்** Mobile : +447447471831
**தயா - பெறாமகன்** Mobile : +447861228921

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 - 10 - 1928
மறைவு 26 - 05 - 2022

### இராயப்பு அந்தோனிமுத்து

(பொன்னுத்துரை)

B.A. ஓய்வு பெற்ற அதிபர் (தரம் 1)

யாழ். பத்தாவத்தை இந்தனையைப் பிறப்பிடமாகவும், தண்ணீரூற்று, முள்ளியவளை, கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து இராயப்பு அவர்கள் 26.05.2022 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராயப்பு செபநேசம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பெர்ணாண்டோ மாகிறேற் தம்பதிகளின் மூத்த மருமகனும்,திரேசா தங்கராணி (அந்தோனிமுத்து ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், ஜெசிந்தா(குஞ்சு), பிரான்சிஸ் தங்கராசா, றெஜிஸ் குணராசா(குணம்), சார்ள்ஸ் ஜெயசீலன் (சீலன்), அன்றனிஸ் ஜெயந்தராசா(ஜெயந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,பிரான்சிஸ் சேவியர், சகுந்தலா, மார்செலா, கவிதா, சிந்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பஸ்தி யாம்பிள்ளை(தம்புத்துரை), மனுவேற்பிள்ளை(முத்து த்துரை) மற்றும் மாகிறேற் (மணி) ஆகியோரின் மூத்த சகோதரரும்,றேசி, லைறிசி, டேவிஸ், சேளியா, அன்று, கிறிஸ்ரியா, அன்ரனி பிலிப், மேரி ஏஞ்சல், அலேஷா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சந்தியாப்பிள்ளை(தவம்), முத்திலம்மா(மணி), காலஞ்சென்ற ஞானசவுந்தரம்(தவம்), இராசகுமாரி, சாள்ஸ் பாலகிருஷ்ணன், சாந்திகுமார், சதானந்தம், மறைந்த சந்திரபோஸ்(குலேந்திரன்),அமலதாஸ்,ஞானஆனந்தன்(பாபா), ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அவர்களின் அன்புச் சகலனும்,ஆன் நிர்மலா அவர்களின் அன்புத் தொட்டப்பாவும்,அஞ்சலா தவமணி மற்றும் சஞ்ஜே ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் நேரடியாக ஒளிபரப்பப்படும். அதற்கான இணைப்பு பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

**பார்வைக்கு**
Friday, 03 Jun 2022 5:00 PM - 9:00 PM
Saturday, 04 Jun 2022 7:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**திருப்பலி**
Saturday, 04 Jun 2022 9:45 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

**நல்லடக்கம்**
Saturday, 04 Jun 2022 11:45 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செபநேசசெல்வி (செல்வி) - பெறாமகள்**

தொடர்புகளுக்கு:
**அந்தோனிமுத்து (இராணி) - மனைவி**
Mobile : +19052016980
**ஜெசிந்தா (குஞ்சு) - மகள்**
Mobile : +14168876980
**பிரான்சிஸ் தங்கராசா - மகன்**
Mobile : +447597507743
**றெஜிஸ் குணராசா(குணம்) - மகன்**
Mobile : +442086920467
**சார்ள்ஸ் ஜெயசீலன்(சீலன்) - மகன்**
Mobile : +447956381508
**அன்ரனிஸ் ஜெயந்தராசா(ஜெயந்தன்) - மகன்**
Mobile : +14165536980
**செபநேசசெல்வி (செல்வி) - பெறாமகள்**
Mobile : +94770691031

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை -நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திருடன் பொலீஸ், தீராதவிளையாட்டுப்பிள்ளை திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு